www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை □ இதழ் 11 □ ஜனவரி 2003 □ ISSN 1474 - 8770 □ விலை £1.25, EUR 2.00

மாதானம் நிலைக்க வேண்டும் - 01

மாதானப் பேச்சுவார்த்தையும்
ஸ்லீம்களின் நிலையும் - 02

ரசியல் தஞ்சம் அரசின் நிலை - 04

வசியம் அரசியல் தீர்வு - 05

மாதானத்துடன்
னநாயகமும் வேண்டும் - 06

ட்டிக் கேட்கத் தயங்காதீர்கள் - 08

R-TEC, TRC, TCHA
ழப்பங்கள் தீரவில்லை - 10

தேயங்கள் துடிக்கட்டும் - 14

ாற்றம் தேடும் சினிமாவும்
ாறாத கலைஞர்களும் - 16

மணிபல்லவத் தொண்டைமான் - 18

சிறைகளின் குரல் - 22

நூல் தேட்டம் - 24

ழவர் திரைக் கலை - அட்டை உட்பக்கம்

இலண்டன் நூல்களுக்கு இலங்கையில்
வரவேற்பு - பின் அட்டை உட்பக்கம்


நிகழ்வுகள் - பின் அட்டை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழவர் திரைக் கலை

நவம்பர் 1ல் புலம் பெயர்ந்து வாழும் திரைக் கலைஞர்களின் சந்திப்பு ருற்றிங் பகுதியில் உள்ள சர்மிஸ் உணவகத்தில் இடம்பெற்றது. புலம் பெயர்ந்து வாழும் திரைப்பட ஆர்வலர்களின் அமைப்பாக உருவாக்கப்பட்ட ஈழவர் திரைக்கலை வளர்ச்சி மன்றம் இச் சந்திப்பை ஒழுங்கு செய்தது. இச்சந்திப்பில் நாடகக் கலைஞரும் இயக்குநருமான ரகுநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஈழத்து தமிழ் சினிமாவில் நீண்ட காலமாக ஈடுபட்டு வரும் ரகுநாதன், புலம் பெயர்ந்த மண்ணிலும் கூட சினிமாவில் ஈடுபட்டு வருவது அனைவராலும் பாராட்டப்பட்டது. அன்றைய நாடகக் கலைஞரும் சட்டவாதியுமான ஜோசப் இச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார். இச்சந்திப்புக்கு கலைஞரும் சட்டத்தரணியுமான சி குலேந்திரன் தலைமை வகித்தார்.

இச்சந்திப்பில் இலண்டனில் இருந்து வெளியாகும், ஒலி, ஒளி பரப்பாகும் ஊடகங்களும் பங்கு பற்றின. அக்கூட்டத்தில் கோடம்பாக்கத்தின் ஆதிக்கம் பற்றியும் அதனை முறியடிக்க வேண்டும் என்றும் சிலர் தமது கருத்துக்களை முன் வைத்தனர். ஆனால் இக் கருத்துக்கள் உடனடியாக நிராகரிக்கப்பட்டது. புலம்பெயர்ந்தவர்களின் திரைக் கலை விருத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியமும் தேவையும் பற்றியே இச்சந்திப்பு எனக் கூறிய பேச்சாளர்கள், தமிழக சினிமாவை எதிர்ப்பது நோக்கமல்ல எனக் குறிப்பிட்டனர். ஹொலிவூட், பொலிவூட் போல் ஈழவூட்டும் உருவாக வேண்டும் என்ற தன் பேராசையை வெளிப்படுத்தினார் அருவி - அமலன். (படத்தில் அமலன் பேசுகிறார். அருகில் இயக்குநர் ரகுநாதன்.) தமிழ் தொலைக் காட்சிகள் புலம்பெயர்ந்த படைப்புகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றும் இச்சந்திப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் புலம்பெயர்ந்த படைப்புகளை ஒளிபரப்புச் செய்ய முன்வந்தமைக்காக தீபம் தொலைக் காட்சிக்கு ரகுநாதன் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். ரகுநாதன் ஈடுபட்ட மௌனம், பரம பதம், நினைவு முகம், யார் இவர்கள், இன்னும் ஒரு பெண், தயவுடன் வழிவிடுங்கள் ஆகிய படங்கள் புலம்பெயர் சினிமாவை ஊக்குவிக்கும் நோக்கில் தீபத்தில் ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய ரகுநாதன் தான் ஓர் வளர்ந்து வரும் கலைஞன் என்றும் சினிமாவில் தான் கற்பதற்கு நிறைய விடயங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சி கலைஞர்களின் சந்திப்பு என்பதாகவே அமைந்தது. மற்றைய புறக் காரணிகளுடன் ஈழத்துக் கலைஞர்கள் மத்தியில் உள்ள புரிந்துணர்வின்மை கலைத் தடிப்பு என்பன கலைஞர்கள் இணைந்து தரமான படைப்புகைள வெளிக் கொணர்வதில் முட்டுக்கட்டையாக இருப்பதாக ஈஸ்ற்ஹாமில் வாழும், ஈழவர் திரைப்பட ஆர்வலர் ஜெயதேவன் சுட்டிக்காட்டினார். கடந்த 30 ஆண்டுகளாக ஈழத்து சினிமாவும் கடந்த 10 ஆண்டுகளாக புலம்பெயர் சினிமாவும் தொடர்ந்தும் தவழும் நிலையிலேயே இருப்பதாகக் குறிப்பிட்ட அவர் தரமற்ற படைப்புகள் எதிர் விளைவை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்தார்.

**அட்டைப்படங்கள்:**

மேல் :திரு ரி ஜீவரட்ணம்-TR-TEC, TRC முன்னாள் செயலாளர், நிர்வாக இயக்குனர் - தற்போது இவற்றில் உறுப்பினர்
கீழ் :டிசம்பர் 7ம் திகதி பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்களின் நிலைபற்றி நடைபெற்ற சந்திப்பு. இடம் - சட்டவல்லுநர் பாருக், நடுவே - பேச்சுவார்த்தைகளில் ஆலோசகராகக் கலந்து கொண்ட மொய்தீன், வலம் - பேராசிரியர் சித்திக்.

www.tamilarangam.net

# அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## சமாதானம் நிலைக்க வேண்டும்

மட்ராஸில் மழைபெய்தால் கொழும்பில் குடை பிடிப்பதை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ செப்ரம்பர் 11ல் அமெரிக்காவில் வெடித்துச் சிதறிய விமானங்கள் இலங்கையில் தீர்க்கமான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது மட்டும் உண்மை. இதனை இன மத பேதமின்றி அனைத்து சமூகங்களும் தக்க வைத்துக் கொள்வது தென்னாசியாவின் சொர்க்கத் தீவாக ஒரு காலத்தில் திகழ்ந்த இலங்கையின் எதிர்காலத்துக்கு மிகவும் அவசியம்.

இச்சமாதானம் பற்றிய அச்சம் தொடர்ந்தும் காணப்படுவதற்கு முக்கிய காரணம் யுத்த தரப்பினர் தாங்களாக உணர்ந்து இந்த சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. செப்ரம்பர் 11ஐத் தொடர்ந்து சர்வதேச அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் தான் யுத்த தரப்பினரை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்தித்து உள்ளது. இதனை பிரதமர் ரணிலின் அரசியல் உரைகளிலும் புலிகளின் தலைவர் பிரபாகரனினது மாவீரர் நாள் உரையிலும் அன்ரன் பாலசிங்கத்தின் வெம்பிளி அரினா உரையிலும் தெளிவாகக் காணலாம். இந்த யதார்த்த நிலையை மக்கள் சரியாகவே புரிந்து கொண்டு உள்ளார்கள். அதனால் தான் அவர்கள் முழுமையாக இப்பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவில்லை.

பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையீனங்கள் இருந்தாலும் இது பேச்சுவார்த்தைகளின் மூலமாக மட்டுமே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. இதற்கு முன்வந்தமைக்கு தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளான புலிகளை நிச்சயம் பாராட்டுவார்கள். இராணுவ வெற்றிகள் மூலம் தமது உரிமைப் போராட்டத்தை தக்க வைத்துக் கொண்ட புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளை இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் வென்றெடுப்பதனால் தான் தங்களுக்கு விடப்பட்டு உள்ள அரசியல் சவாலை வெற்றி கொள்ள முடியும். புலிகள் இந்த சவாலில் வெற்றி கொள்வது தமிழ் மக்களின் இருத்தலுக்கு இன்றியமையாதது.

இந்த நிலையில் புலிகள் தமிழீழத்தை கைவிட்டு விட்டார்கள் என்பது போன்ற பிரச்சாரங்கள் எந்த பலனையும் தராது. தமிழ் மக்களுக்கு உடனடியாகத் தேவையானது தமது உரிமைகளுடன் வாழும் சுதந்திரமான சமத்துவமான வாழ்க்கை. அதற்கு ஏற்ற தீர்வை நாம் பெற்றுக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதைவிடுத்து இத்தனை ஆயிரம் உயிர்களை இதற்காகவா இழந்தோம் (அப்படியானால் இன்னும் எத்தனை ஆயிரம் உயிர்களை கொடுக்க நீங்கள் தயாராய் இருக்கிறீர்கள்.) என்று கேட்டு அவர்களை மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு நிர்ப்பந்திப்பது விவேகமானது அல்ல.

பெறப்படும் தீர்வில் தமிழ்—மூஸ்லீம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் பிரித்தாளும் தந்திரம் ஒன்றை அரசாங்கம் புகுத்தலாம். தமிழ் பகுதிக்குள் இன்னுமோர் உள்நாட்டு யுத்தத்தை யாராலும் தாங்கிக் கொள்ள முடியாது. முஸ்லீம்கள் தமது உரிமைகளுடன் வாழும் உரிமை உள்ளவர்கள் என்பதை அரசாங்கமும் புலிகளும் உணர்வுரீதியாக ஏற்றுக் கொண்டால் பேச்சுக்களில் முஸ்லீம் தரப்பையும் ஈடுபடுத்த வேண்டும். அப்படி உருவாக்கபடும் சாமாதானம் தான் மூன்று இனங்களுக்கும் நிரந்தரமானதாக அமையும்.

தேசம் பத்ரி

தொழில்நுட்ப உதவி : எஸ் கௌதமன்

பிரதம ஆசிரியர் - த ஜெயபாலன்
(0044) (0)20 8279 0354
நிர்வாக ஆசிரியர் - என் செல்வராஜா
( நூலகவியலாளர் )
(0044) (0)15 8270 3786

ஆசிரியர் குழு

THESAM
P.O.Box 35806
London, E11 3JX
United Kingdom
Fax : 020 8534 0797
thesam97@hotmail.com

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் முஸ்லிம்களின் நிலை என்ன என்பது பற்றியும் முஸ்லீம், தமிழ் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு பற்றியுமான சந்திப்பும் கலந்துரையாடலும் பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் முஸ்லீம் சமூகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. டிசம்பர் 7ம் திகதி மனோபார்க் போர்ட் சென்ரரில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு பேராசிரியர் ஜனாப் எம் வை எம் சித்திக் தலைமை தாங்கினார். எப் எஸ் எம் பாருக், சட்டவல்லுனர் எஸ் எம் எம் பசீர், ஜலால்தீன், தேசம் ஜெயபாலன் ஆகியோர் இதில் உரையாற்றினர். சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஆலோசகராகக் கலந்து கொண்ட எம் ஐ எம் மொய்தீன் இச்சந்திப்பில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு இலங்கைச் சமாதானப் பேச்சுக்களும் முஸ்லீம்களின் நிலையும் என்பது பற்றி விளக்கினார். கூட்ட முடிவில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# சமாதானப் பேச்சுவார்த்தையும் முஸ்லீம்களின் நிலையும்

தொகுப்பு
த ஜெயபாலன்

### வடக்கு கிழக்கு முஸ்லீம்களுக்கு தீர்வு இல்லை என்றால் வடக்கு கிழக்கில் சமாதானம் இல்லை:

நோர்வேயில் பேசியவர்கள் வெறும் கையுடன் தான் திரும்பி இருக்கிறார்கள் என்று தனது தலைமை உரையில் குறிப்பிட்ட சித்திக் அதிகாரப் பகிர்வு பற்றி இன்னமும் பேசப்படவில்லை எனத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் பேச்சு வார்த்தை இழுத்தடிக்கப்படுவதற்குக் காரணம் அதிகாரப்பகிர்வை தாமதிக்க அல்லது தவிர்க்கவே எனத் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் முஸ்லீம் களை தனித்துவமான இனமாக ஏற்றுக்கொள்ள பின் நிற்கின்றனர் எனக் குற்றம் சாட்டிய சித்திக் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னரும் முஸ்லீம் களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்றிருப்பது முஸ்லீம்களை சந்தேகத்துக்குள்ளாக்குவதாகக் குறிப்பிட்டார். மேலும் விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் தன்னிச்சையாக ஆட்சி அமைக்க முற்படுவதாக முஸ்லீம்கள் ஐயப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்றால் வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்று சுட்டிக்காட்டியதுடன் முஸ்லீம்களின் பயம் நீக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### சமாதானத் தீர்வு அடிமைச் சாசனம் ஆகக் கூடாது:

சமாதானம் பற்றி மூன்று இனங்களுமே பயப்படுவதாகக் கூறித் தனது பேச்சை ஆரம்பித்தார் பாருக். 1960 சமஸ்டி கேட்ட அமிர்தலிங்கம் போன்றோர் கொல்லப்பட்டனர். இத்தனை ஆயிரம் உயிரிழப்புகளுக்குப் பின் புலிகள் சமஸ்டி கேட்கின் றனர். அப்போது சமஸ்டி கொடுக்க மாட்டோம் என்ற ஐக்கிய தேசியக் கட்சி இன்று கொடுக்கத் தயாராய் இருக்கிறது. இவை எதுவுமே நம்பிக்கையூட்டுவதாக இல்லை என பாருக் தனது உரையில் சந்தேகத்தை வெளிப்படுத்தினார். அவர் தொடர்ந்து பேசுகைளில் 1948ல் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத் தீர்வு தமிழர்களுக்கு கொடுக்கப்பட்ட அடிமைச்சாசனம் எனக் குறிப்பிட்ட அவர் இன்றைய சமாதானத் தீர்வு முஸ்லீம்களுக்கு கொடுக்கப்படும் அடிமைச்சாச னமாக அமையக் கூடாது எனக் குறிப்பிட்டார்.


சந்தாப் படிவம்

அடுத்து வரும் ஆறு இதழ்களிற்கான சந்தாவை அனுப்பி வைப்பதன் மூலம் தேசத்தை உங்கள் இல்லங்களிற்கே வரவழைக்க முடியும். காசோலையை (பிரித்தானியா) அனுப்புவதாயின்

**THESAM**

என்ற பெயருக்கு வரையவும்.

THESAM, P O Box 35806
E11 3JX, United Kingdom

பெயர் :---------------------------------

முகவரி :---------------------------------

---------------------------------

---------------------------------

தொ.இல :---------------------------------

மின் அஞ்சல் :---------------------------------

வட்டம் இட்டு அடையாளப்படுத்தவும்

UK £10 US $25 EUR 20


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜலால்தீன் தனது உரையில் ஐரோப்பிய காலனித்துவ வாதிகளே முஸ்லீம்களுக்கு உரிமை களை வழங்கி இருந்த போது, முஸ்லீம்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என சிலர் கேட்பது ஆச்சரியமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அங்கு பேசிய ஜெயபாலன் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை எல்லா இனங்களுக்கும் பொது வான உரிமை என்றும் முஸ்லீம்களுக்கும் அதைக் கேட்கும் உரிமை உண்டு என்று குறிப்பிட்டார்.

## வேற்றுமையில் ஒற்றுமை:

இரண்டு பேரினவாதிகளால் பாதிக்கப்பட்ட வர்கள் முஸ்லீம்கள் என தனது பேச்சை ஆரம்பித்த பசீர் ஆயுதப் போராட்டத்துக்குப் பின் முஸ்லீம்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார். மறப்பதும் மன்னிப்பதும் அன்ரன் பாலசிங்கத்தின் உரிமையல்ல எனக் குறிப்பிட்ட பசீர் புலிகளின் தலைவருடன் பேசினாலும் பேசலாமே அல்லாமல் அன்ரன் பாலசிங்கத்துடனோ தமிழ் சங்கங்களின் பிரதிநிதிகளுடனோ பேச முடியாது எனச் சாடினார். சமாதானம் எங்கள் தலைமுறைக்கும் விட்டுச் செல்ல வேண்டிய ஒன்று எனக் குறிப்பிட்ட பசீர் வேறுபாட்டில் ஐக்கியம் காண வேண்டும் எனத் தெரிவித்தார். அதற்கு கீழ் மட்ட அளவில் வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். இறுதியில் ரணில் விக்கிரமசிங்காவும் பிரபாகரனும் கைகுலுக்கலாம் என்றால் தமிழர்களும் முஸ்லீகளும் சேரலாம் என்ற நம்பிக்கையை வெளியிட்டார்.

## அரசியல்வாதிகளை நம்பிப் பயனில்லை. முஸ்லீம்களின் உரிமையை வென்றெடுக்க சுயாதீன அமைப்பு அவசியம்:

மொய்தீன் தனது பிரதம உரையில் பேச்சுவார்த்தை அரங்கிலும் அதற்குப் பின்னும் நடைபெற்ற அரசியல் விடயங்களை ஆழமாகவும் நகைச்சுவையுடனும் வெளிக்கொண்டு வந்தார். முஸ்லீம் அரசியல் கட்சித் தலைவர்கள் முஸ்லீம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக தலைமைக்கு சண்டையிடுவதை சுட்டிக்காட்டியதுடன் சுயாதீனமான முஸ்லீம் குழு ஒன்றே தற்போதைய சூழ்நிலையில் முஸ்லீம்களைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் முஸ்லீம்கள் தனித்துவமாக பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதை விரும்பவில் லை எனவும் அவர் தெரிவித்தார். அனரன் பாலசி ங்கம் தாங்கள் பிற்பாடு இதுபற்றிப் பேசலாம் எனக் கூறியதாகக் குறிப்பிட்ட மொய்தீன் இந்த வாக்குறுதிகளை எல்லாம் இனிமேலும் முஸ்லீம் சமூகம் நம்பத் தயாராயில்லை எனக் குறிப்பிட்டார்.

தான் அரச சார்பில் கலந்து கொண்ட ரவுப் ஹக்கீமிற்கு ஆலோசகராகவே கலந்து கொண்டதா கவும் அதனால் பேச்சுவார்த்தைகளில் பின் வரிசை யிலேயே அதுவும் பலத்த போராட்டத்திற்குப் பின் அமர்த்தப்பட்டதாகவும் கூறிய மொய்தீன் இது முஸ்லீம்களை அவமதித்த செயல் எனக் குறிப் பிட்டார். எதிர் காலத்தில் தான் முஸ்லீம் பிரதிநிதி யாகக் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாவிட்டால் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில் லை எனச் சூளுரைத்தார். முஸ்லீம்களின் தலைமை த்துவ சண்டைகளை சாதகமாக்கி பேச்சு வார்த்தை களில் முஸ்லீம்களை கைவிட முடியாது எனக் குறிப்பிட்ட மொய்தீன் முஸ்லீம்களை உள்ளடக்குவ தற்கான பொறிமுறையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். ரணில் பிரதமராகிய தும் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக் கப்பட்டதும் அன்றைய சந்திரிகாவின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் தான் எனக் குறிப்பிட்ட அவர் அதற்கு வழிவகுத்தவர்கள் முஸ்லீம்கள் எனச் சுட்டிக்காட்டினார்.

முஸ்லீம்களது உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறிய மொய்தீன் புலிகள் ஆயுதங்களை வைத்துக் கொண்டு எங்களுக்கு பூச்சாண்டி காட்டக் கூடாது எனத் தெரிவித்தார். உரிமைகள் மறுக்கப்பட்டால் புலிகளுக்கு 20 ஆண்டுகள் எடுத்த விடயத்தை முஸ்லீம் இளைஞர்கள் 10 ஆண்டுகளில் முடிப்பார் கள் எனத் தெரிவித்தார். மொய்தீனின் வார்த்தைப் பிரயோகங்களை அருகில் இருந்த பசீர் கட்டுப்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டார். மொய்தீன் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தகைளை வெளியிட்ட போதும் முஸ்லீம்கள் ஆயுதம் தூக்குவது விவவேகமாகாது என்பதும் ஜனநாயக ரீதியில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து போராட வேண்டுமெனவும் மொய்தீன் பின்னர் கருத்துத் தெரிவித்தார். ஏனைய பேச்சாளர் களும் அதனை கோடிகாட்டினர். முஸ்லீம் இளைஞர் களை அந்நிலைக்கு தமிழர்கள் தள்ளிவிடக் கூடாது என்பது போன்ற கருத்துக்களும் வெளிப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இரத்தம் சிந்திய போராட்டத்திற்கு மதிப்பளித்த பேச்சாளர்கள் முஸ்லீ ம்கள் தங்கள் உரிமைகளைக் கேட்பதை அன்ரன் பாலசிங்கம், திருத்தந்தை ஜெகத்கஸ்பார் அடிகளார் போன்றவர்கள் பேச்சுவார்த்தைகளை முஸ்லீம்கள் குழப்புகிறார்கள் எனக் காட்ட முயல்வது இரு இனங் களுக்கும் இடையிலான புரிந்துணர்வுக்கு உதவாது எனத் தெரிவித்தனர். ஐபிசி வானொலி முஸ்லீம்கள், இனநல்லுறவு பற்றி கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கூட்டத்தில் முஸ்லீம் காங்கிரசின் ஆதரவாளர்கள் மொய்தீன் அவர்கள் கட்சியை அவமதிப்பதாகக் கருத்து வெளியிட்டனர். ஆனால் அவர்களுடைய கருத்து உடனடியாக மறுதலிக் கப்பட்டது. பேச்சுவார்த்தைகளில் தமிழர்கள் தங்க ளுக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவாக இருக் கிறார்கள் எனக் குறிப்பிட்ட பேச்சாளர்கள் முஸ்லீம் கள் தமக்கு என்ன வேண்டும் என்பதை தெளிவாக முடிவு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியல் தஞ்சம் அரசின் நிலை

## Home Office

தடுத்து வைப்பதையும் திருப்பி அனுப்புவதையும் நிறுத்தக் கோரி ஓகஸ்ட் 20ல் தேசம் சஞ்சிகையின் ஆதரவில் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துப் போராட்டத்துக்கு குடிவரவு மற்றம் தஞ்சக்கொள்கைகளுக்குப் பொறுப்பான உள்நாட்டு அலுவலக அமைச்சர் Beverley Hughes சார்பில் Geoffrey Filkin எழுதிய கடிதத்தின் சாரம்.

Stephen Timms Esq MP
House of Commons
LONDON
SW1A 0AA

Our Ref: IMG/02 247/1184/2
PO 21533/02

17 NOV 2002

Dear Stephen

Thank you for your letter dated 11 October to Jack Straw enclosing this one from Mr T Jeyabalan, Chief Editor of Thesam (Tamil Community Magazine), about the asylum decision making process and the return of failed Tamil asylum seekers to Sri Lanka. Mr Jeyabalan has also written to other MP's in the United

தமிழ் தஞ்ச விண்ணப்பங்களை மொத்தமாக நிராகரிக்கும் கொள்கை எதுவும் இல்லை என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும். ஐக்கிய நாடுகள் சபையின் 1951 உடன்படிக்கை 1967ம் ஆண்டு விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு, ஐக்கிய ராஜ்சியத்தில் அனைத்துத் தஞ்ச விண்ணப்பங்களும் அவர்களின் தகமையின் அடிப்படையிலேயே பரிசீலிக்கப்படுகிறது.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் நடைபெறும் சமாதான நடவடிக்கைகளுக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் ஐக்கிய ராஜ்ய அரசு பூரண ஆதரவை வழங்குவதுடன் தொடர்ந்தும் அவதானமாக அதனை கண்காணித்து வருகிறது. அனைத்துத் தரப்பினரும் இணைந்து இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களினதும் விருப்பங்களையும் பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்க வேண்டிய தேவை உள்ளது என்பதை ஐக்கியராஜ்யம் வலியுறுத்துகிறது. பேச்சுவார்த்தை நடைமுறைகள் விருத்தி அடையும் அதேசமயம் சர்வதேச சமூகம் ஒன்றாக இணைந்து உறுதியான ஆதரவையும் உதவியையும் வழங்க வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் இரு தரப்பினருடனும் இலங்கையில் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை தெரிவித்து வருகிறோம். அனைத்து சமூகங்களினதும் மனித உரிமைகள் மதிக்கப்படுவது எந்தப் பேச்சுவார்த்தை நடவடிக்கையினதும் முக்கிய அம்சம். இலங்கையில் தளத்தில் நடைபெறும் ஏனைய நிகழ்வுகளையும் நாம் தொடர்ந்தும் அவதானித்து வருகிறோம்.

தஞ்சவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களோ அல்லாதவர்களோ கொழும்பைத் தவிர நாட்டின் வேறு எப்பாகத்திற்கும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்ற உறுதியை அளிக்கிறோம். பாதுகாப்பானது என எப்போது நாங்கள் திருப்தி அடைகிறோமோ அப்போது தான் அந்த வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வெளியேற்றும் பட்சத்தில் அந்நபர் கொடிய, மனிதத்துவத்திற்கு முரணாக, கீழ்த்தரமாக தண்டிக்கப்படுவாராக (சித்திரவதை) இருந்தால் அவரை வெளியேற்றுவது பொருத்தமானது அல்ல. இப்படியான நிலையில் விண்ணப்பதாரி தஞ்சம் பெற தகுதியானவராக இல்லாதவிடத்து ஐக்கிய ராஜ்யம், ஐரோப்பிய மனித உரிமைகள் உடன்பாட்டின் பகுதி 3ற்கு கட்டுப்பட்டு அவருக்கு விதிவிலக்கு அளிக்கும். மேலும் நாங்கள் தஞ்சம் விண்ணப்பத்தை நிராகரித்து விண்ணப்ப தாரியை வெளியேற்ற முற்பட்டால் அவர்கள் அந்த முடிவுக்கு எதிராக சுயாதீன அமைப்பிடம் (Immigration Appellate Authority) மேன்முறையீடு செய்யலாம். இரு தரப்பு நியாயங்களையும் சட்டத்தையும் மீளாய்வு செய்யும் அதிகாரம் அவ்வமைப்பிற்கு உண்டு.

பெப்ரவரி 2002ல் யுத்த நிறுத்த அறிவிப்பையும் அதைத் தொடர்ந்த பேச்சுவார்த்தை →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவசியம் அரசியல் தீர்வு

**Tamil Progressive Movement,**
B.M.Box No. 1738, London, WC1 X 3NN, United Kingdom

போர் நிறுத்தம் நிரந்தரமாக இருப்பதற்கு, தமிழ் மக்களின், நியாயமான அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வு உடனடியாக ஏற்பட்டாக வேண்டும். அப்படி ஏற்படும் அரசியல் தீர்வு, எதிர்காலத்தில், எதுவித சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் அரசியல் களத்தில் மறுபடியும் பந்தாடப்பட்டு, முறியடிக்க முடியாதவாறு, அரசியல் யாப்பில் இணைக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு சர்வதேச நாடோ, அமைப்போ, உத்தரவாதம் வழங்க வேண்டும். இவை தான் தமிழர்களின் இன்றைய உடனடித்தேவை.

தமிழர்களின் போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம், அரசாங்கம் பொருளாதாரத் தடையை விதித்ததோ அல்லது புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததோ அல்ல. இவைகளெல்லாம் போராட்டத்தின் விளைவுகளேயன்றி, காரணங்களல்ல. விளைவுகளுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து அவ்விளைவுகளை நீக்குவதே எமது போராட்டம் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதானது, இந்த விளைவுகளின் காரணிகளை நீக்குவதுதான் எமது போராட்டத்தின் நோக்கம் என்பதை மழுங்கடித்து விடும். இந்த விளைவுகள் ஓரளவு நீக்கப்பட்டவுடன், ஒரு அரசியல் தீர்வை அரசாங்கம் அமுலாக்கி விட்டது போன்ற பிரமை அல்லது மாயத்தோற்றம் ஏற்பட்டுவிடும்.

அது மட்டுமல்லாது. இந்த விளைவுகளின் நீக்கம் பற்றியே பேசிக்கொண்டும் விவாதித்துக் கொண்டும், காலத்தை இழுத்தடித்துக் கொண்டு இருப்போமானால், அரசியல் தீர்வை விரும்பாத, மக்கள் நலன் விரும்பாத, சுயநலமே நோக்கமாகக் கொண்டு இயங்கும் சில அரசியல் கட்சிகளுக்கும், இராணுவத்தினருக்கும், அழிவு சக்திகளுக்குந்தான் நாம் இடம் கொடுத்தவர்களாகிவிடுவோம். காலம் சிறிது தாழ்த்தினாலும், இத்தகைய சக்திகள், மெல்ல மெல்ல, தலை காட்டி சாக்குப் போக்குகள் கூறி ஒரு அரசியல் தீர்வு ஏற்படாதிருப்பதற்கு வழி வகைகளைச் செய்து கொண்டேயிருப்பார்கள்.

மாற்றுத் தீர்வினை ஏற்றுக்கொள்ளத் தமிழர்கள் தயாராக உள்ளனர். ஸ்ரீலங்கா அரசின் ஈழத்திற்கு மாற்றான தீர்வு என்ன? அதைப் பற்றிப் பேசுவோம். இதற்கு ஒரு திர்வு கண்டால், மற்றைய பிரச்சினைகள் இல்லாது போகும்.

பல வருடங்களாக தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணாததால், அரசு தொடர்ச்சியான பொருளாதார, சமூகச் சீரழிவுகளுக்கு உள்ளாகி விட்டது உண்மை. இந்நிலையை உணர்ந்து, மக்களின் நலனை நாட்டின் சுபீட்சத்தை மனதிற்கொண்டு, அரசியல் தீர்வுக்கான உங்கள் திட்டத்தை உடன் முன்வையுங்கள். அதனைப்பற்றிப் பேசி, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு நியாயமான அரசியல் தீர்வு கண்டால், சிங்கள இனமும் தமிழ் இனமும் ஒருங்கிணைந்து இந் நாட்டில் வாழ முடியும். அப்பொழுது தான் இந்த நாடு முன்னேறும்.

சந்தர்ப்பங்களையும் காலத்தையும் விரயமாக்கினோமானால் அதற்கு உடந்தையாக இருப்போமானால் அழிவு சக்திகள் தலை தூக்க, தங்களைப் பலப்படுத்த அடிகோலியவர்களாகி விடுவோம். மறுபடியும் போர் மூள்வதற்கு வித்திட்டவர்களாகி விடுவோம். வருங்கால சமுதாயத்திற்கு நாம் பாரிய தீர்க்க முடியாத தீங்கிழைத்தவர்களாகி விடுவோம். இந்நிலைமை ஏற்படாதிருக்க வேண்டுமாயின் தமிழர் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் தங்களாலான அழுத்தங்களை சம்பந்தப்பட்ட தமிழ்-சிங்கள அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் கொடுக்க வேண்டும். வேறு விஷயங்களில் காலத்தையும் சந்தர்ப்பத்யையும் விரயமாக்காது, அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய உந்துதல்களைக் இவர்கள் கொடுக்க முன் வரவேண்டும்.

(இதுTamil Progressive Movement 21 பெப்ரவரி 2002 ல் வெளியிட்டஅறிக்கையின் சாராம்சம்)

---

நடவடிக்கைகளையும் அடுத்து நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தஞ்ச விண்ணப்பதாரிகளை வெளியேற்றுவது தொடர்பாக எந்தக் கொள்கை மாற்றமும் செய்யப்படவில்லை. நிராகரிக்கப்பட்ட தஞ்ச விண்ணப்பதாரிகளை வெளியேற்றுவது என்ற தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட கொள்கைக்கு அமைய கொழும்புக்கு வெளியேற்றங்கள் இடம்பெற்று உள்ளது.

I hope this is helpful.

Yours ever,

GEOFFREY FILKIN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கனடா மாநாடு ஒரு கண்ணோட்டம் :

# சமாதானத்துடன் ஜனநாயகமும் வேண்டும்



**வீ சிவலிங்கம்**
மனித உரிமைவாதி,
வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு
மற்றும் முன்னிலையாளர்

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அரசுமும் விடுதலைப் புலிகளும் அவர்களுக்கு உதவி வழங்கும் நாடுகளும் சந்திக்க கனடாவின் தலை நகர் ரொறன்ரோவில் தமிழ் சமூகத்தின் மனித உரிமைகள் பற்றி அக்கறையும் ஆர்வமும் உடைய ஒரு பிரிவினர் சந்தித்தனர். கடந்த நவம்பர் மாதம் 23ம் 24ம் திகதி களில் கனடாவிலுள்ள ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இலங்கையின் பொதுவான அபிவிருத்தி குறித்தும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஜனநாயக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக்கொண்ட மாநாடு இடம்பெற்றது. இம் மாநாட்டுக்கு பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, கனடா, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்ட பலர்

மாநாட்டினர் வடக்கு, கிழக்கு அபிவிருத்தியின் போது இஸ்லாமிய மக்களின் நலன்கள் கவனிக்கப்பட வேண்டுமெனவும், குறிப்பாக வட பகுதியிலிருந்து துரத்தப்பட்டு தற்போது புத்தளத்தில் அகதி முகாம் களில் வாழ்ந்து வரும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்களை ஒருங்கிணைப்பதே அம் மாநாட்டின் நீண்டகாலத் திட்டமாக அமைந்தது. தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக உரிமைக்கான போராட்டம் தற்போதைக்கு முடிவடையப்போவதில்லை என்பதை அடையாளப்படுத்திய மாநாடு ஓர் நீண்டகாலப் போராட்டத்துக்காக மக்களைத் தயார்ப்படுத்தும் அவசியம் பற்றியும் ஆராய்ந்தது.

நோர்வேயில் இடம்பெற்ற இலங்கைக்கான கடன் வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பெறு பேறுகளின் அடிப்படையில் கடன் உதவிகளை மிகவும் வெளிப்படையான விதத்தில் பயன்படுத்த வும், சாதாரண மக்களின் அமைப்புகள் இப் பணத்தைப் பயன்படுத்தும் தீர்மானங்களில் முக்கிய

அழைக்கப்பட்டடிருந்தனர். இம் மாநாடு கனடிய சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் கனடிய தொழிற் சங்கங்களினால் கூட்டப் பட்டு இருந்தது.

ஜனநாயகப்படுத்தலும், சமாதானமும் என்ற அடிப்படையில் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றன. தாய்லாந்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஏனைய பேச்சு வார்த்தைகளிலும் ஜனநாயக அம்சங்கள் இணைக் கப்பட வேண்டுமெனவும் இலங்கை முழுவதற்குமான ஜனநாயக மாற்றத்தையும் கோரியே இம் மாநாட்டின் நோக்கங்கள் அமைந்திருந்தன.

சமாதானம், ஜனநாயகம் என்பன இலங்கை யில் நிரந்தரமாக நிலவுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டங்கள் குறித்தும் ஆராயப் பட்டன. குறுகிய கால திட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலவரங் கள் குறித்தே தீவிரமாக ஆராயப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவும் மனித உரிமை மீறல்கள் குறித்து பலரும் தமது கவலையை வெளியிட்டனர். குறிப்பாக இஸ்லாமிய மக்களின் நிலமைகள் குறித்து ஆராய்ந்த

பங்கினை வகிக்கும் விதத்திலும் மக்கள் அமைப்பு கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டுமெனவும் எடுத்து ரைக்கப்பட்டு உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சிவிலி யன் அமைப்புகள் மிகவும் பலவீனமாக உள்ளதால் அவ் அமைப்புகளை உற்சாகப்படுத்தும் வகையில் வெளிநாடுகளிலிருந்து பல்வேறு துறைகளைச் சார்ந்த தமிழ் அறிஞர்கள், திட்டமிடல் மற்றும் மனித உரிமை சம்பந்தப்பட்ட அறிஞர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் சென்று செயற்படுவதற்கான திட்டங்களும் விவாதிக்கப்பட்டன. சிவிலியன் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய வற்றுடன் நெருக்கமான உறவுகளைப் பேணும் வகையிலும், அதேவேளை சிங்களப் பகுதிகளி லுள்ள முற்போக்கு சக்திகளுடனும் இணைந்து செயற்படுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.


சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம், பன்மைத்துவ அரசியல் என்பவற்றை வளர்க்கும் விதத்தில் தகவல் தொடர்பு மற்றும் வெகுஜன ஊடகங்களுடன் நெருக்கமான உறவுகளை வளர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






மாநாட்டில் கலந்து கொண்ட வர்களில் ஒரு பிரிவினர்:

வும் அதேவேளை மாற்று ஊடகங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறியவும் தீர்மானிக்கப்பட்டது. கடனுதவிகள் வழங்கப்படும் போது வெளி நாடுகளால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளின் உள் நோக்கங்கள், அரசாங்கத்தின் செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் வெளிநாடுகளில் வாழும் தமிழ்பேசும் மக்களால் வழங்கப்படும் நிதி உதவி, மற்றும் பல மூலவளங்களை ஒருமுகப்படுத்தி பயன் படுத்தும் மூல உபாயங்களை மக்களுக்கு அறிவிப் பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இச்செயற்பாடு களுக்கான பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக இடம் பெற்ற இம்மாநாட்டின் பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் www.lines.magazine.org என்ற இணை யத் தளம் மூலமாக தெரியப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.□□□□□□□□□□□□□□□□□□□□

**வாசகர்களுக்கு !!!** : உங்கள் குடிவரவு தொடர்பான கேள்விகளுக்கு திரு குலேந்திரன் அவர்கள் பதிலளிப்பார். உங்கள் கேள்விகளை தபாலிலோ, தொலைநகல் மூலமாகவோ, இணையம் வழியாகவோ தேசம் சஞ்சிகைக்கு அனுப்பி வைக்கவும். முகவரிகள் பக்கம் 1ல்.

**கவலைகளை களைந்தெறியுங்கள்**

IMMIGRATION

அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் - மேன்முறையீடுகள்,
நாடு கடத்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்,
மனித உரிமை விண்ணப்பங்கள்,
அனைத்து விண்ணப்பங்களுக்கும்

**நீண்டகால அனுபவமும் அண்மைக் காலத்தில் கூடுதல் மேன்முறையீட்டு வழக்குகளில் வெற்றி பெற்ற எமது இயக்குனர் திரு குலேந்திரனை அணுகுங்கள்.**

**Interanational Refugees Organisation**

1083 Garratt Lane
London
SW17 OLN (Tooting Broadway - 2mins from tube)

Tel: 020 8682 4494
020 8682 9480
Mobile : 079 6107 1875
Fax: 020 8682 9922



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தட்டிக் கேட்கத் தயங்காதீர்கள்

விமலன்

கடந்த தேசம் சஞ்சிகையில் இடம்பெற்ற ஜெயபாலனின் சீரற்ற - திறனற்ற - ஊழல் நிறைந்த தமிழ் அமைப்புகள் என்ற கட்டுரையில் சொல்லப் பட்ட விடயமொன்றும் ஆச்சரியப்படத்தக்க பரமரகசி யமல்ல. ஈழப்பிரச்சனையால் உயிர் தஞ்சம் தேடி ஓடிவந்து அகதிகளாய் வாழும் தமிழர்கள் பெயர் சொல்லி வாழும் குழுக்களை கட்டுரை அழகாக படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது.

இலண்டனில் ஊருக்கொரு தமிழ் ஸ்தாப னம் இருக்கின்றது. இவைகளில் சில ஸ்தாபனங்க ளில் கடமை புரிபவர்கள் என்று சொல்லிக் கொள்ப வர்களின் உத்தியோகப்பற்றை எழுத்தில் சொல்ல முடியாது. இவர்கள் நாற்காலிகளை சிம்மாசனம் ஆக்கிவிடுகின்றார்கள். எடுத்தெறிந்து பேசுதல், அலைக்கழித்தல் போன்ற செயல்களால் தங்களுக் குள் தங்களை தாங்களே ராஜாவாக்கிக் கொள்கிறா ர்கள். அகதிகளின் பிரச்சனையை முடிக்கின்றார் களோ இல்லையோ அவர்கள் வந்து போன தற்கான அத்தாட்சிக் கையொப்பத்தை வாங்கிக் கொள்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள்.

அகதிகள் சம்பந்தமான ஒரு ஸதாபனத்தில் எனக்குத் தெரிந்த ஒருவர் வேலை செய்கின்றார். 10 வருடங்களுக்கு மேலாக எனக்குப் பழக்கம். அவர் ஏதோ நாளைக்கே எல்லோரையும் கப்பலில் ஏற்றி அனுப்பிவிடுவார்கள் என்பது போலத்தான் பேசுவார். தமிழ் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் குரல் கொடுப்பதிலும் முகம் காட்டுவதிலும் கெட்டிக்காரன்.

கடந்த மாதம் வானொலி உரையாடல் ஒன்றின் போது பிரான்ஸில் இருந்து எழுத்தாளர் அரவிந்தன், நமக்குள்ளும் நமது சமூகத்துள்ளும் பொதுநலப்பார்வையும் சமூக நல்லெண்ணமும் மிகமிகக் குறைவென்று சொன்னார்.

தமிழ்நாட்டின் அரசியலையும் சினிமா மோகத்தையும் பார்த்து நகைக்கின்றோம். ஆனால் அதே தமிழ் நாட்டில் ஒரு கொட்டாம்பட்டிக் கிராமத்தில் ஒரு குழந்தைக்கு ஏதுமென்றால் அந்தக் கிராமமே ஒன்று கூடி மறியல் போராட்டம் செய்து அரசிற்கு எதிர்ப்பைக் காட்டக் கூடிய அளவிற்கு அந்தக் கிராமத்தில் இருக்கும் பொது நலனும் சமூக நலப்பார்வையும் நம்மில் யாருக்கு உண்டு. நம்மூரில் பொதுமகன் ஒருவனுக்காக பொது மக்கள் போராட்டம் நடத்தியதாக ஒரு நிகழ்வேயில்லை. அங்கு தான் அப்படியென்றால் புலம் பெயர்ந்த நாடுகளின் நிலமையும் அப்படியே தான் தொடர்கின்றது.

மொழிரீதியாக மதரீதியாக நிறரீதியாக புலம்பெயர்ந்த நாடுகளில் எத்தனையோ இனத் தவர்கள் வாழ்கின்றார்கள். ஒரு இந்தியரோ, பாகிஸ் தானியரோ, கறுப்பினத்தவரோ தனிப்பட்ட முறையில் பிரச்சினைகளுக்கு உள்ளாகும் போது அந்தந்த சமூகத்தவர் அவர்களுக்காகக் குரல் கொடுப்பது போல நமது சமூகத்தில் நமக்காக யாரும் குரல் கொடுப்பதில்லை. இந்த நேரத்தில் இங்குள்ள தமிழ் ஸ்தாபனங்கள் கூட அவர்களுக்காக குரல் கொடுத்த செய்திகளும் இல்லை. ஒருவரோடொருவர் பொருளா தாரரீதியாக முன்னேறத்தான் துடிக்கிறார்களே தவிர பொது நலன் என்பது மிகக் குறைவு. வீதியில் ஒரு ஈழத் தமிழர் ஆபத்தில் இருந்தாலும் வேடிக்கை பார்த்து விட்டுப் போகும் நிலையில் தான் நமது புலம்பெயர் வாழ்வின் சமூகப் பார்வை இருக்கின்றது.

கண்பார்வையற்ற ஒரு தமிழ் அகதிப் பெண் தான் வசிக்கும் இடத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் இனத்துவசத்தால் தனக்கேற்பட்ட இன்னல்களையும் கடந்த வருடம் வானொலியில் சொல்லி அழுதது நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது. எங்கள் தமிழ் ஸ்தாபனங்களிடம் சொல்லியும் எந்த உதவியும் கிடைக்கவில்லை என்றும் அப்பெண் வருந்திக் கொண்டார்.

புலம்பெயர்வாழ் அகதிகளின் விசாப் பிரச்சினை தவிர்த்து மற்றைய பிரச்சினைகளுக்கா கக் குரல் கொடுக்க எத்தனை தமிழ் ஸ்தாபனங்கள் இருக்கின்றது. ஏன் இவர்கள் அவற்றில் அக்கறை கொள்வது குறைவாக இருக்கிறது.

புலம்பெயர் நாடுகளில் இருக்கும் ஒவ்வொரு தமிழ் ஸ்தாபனமும் இங்குள்ள அரசுடனும் இலங்கை அரசுடனும் தமிழீழ விடுதலைப் போராட் டக் குழுவுடனும் ஏதோ ஒரு வகையில் எப்படியோ ஒரு தொடர்பை வைத்திருக்கிறார்கள் என்பதை

ஐரோப்பியத் திரைப்படக் கழகத்தின்
குறும் திரைப்பட விழா
இலண்டன் மார்ச் 2003 0044 208 279 0354
சுவிஸ் பெப்ரவரி 2003 0041 62 212 9623
www.ajeevan.com



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இவர்களுக்கிடையில் சந்திப்புகள் கலந்துரையாடல்கள் எல்லாம் நடைபெறும் ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றது என இவர்களுக்கு எண்ணத் தோணாது.

ஈழத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் நாட்டில் நிலவிய அமைதியை அடுத்து பல வருடங்களுக்குப் பின் சொந்தங்களைக் காணப் போனவர்கள் சிலர் மிகக் கசப்பான அனுபவத்தை பெற்றிருக்கிறார்கள். சமாதானம், சொந்த ஊர், எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று நம்பிக்கையுடன் போனவர்கள் சிலர் அந்நியர்களாய் நடத்தப்பட்டனர், பணம் கேட்டு கூட்டிச் செல்லப்பட்டு நள்ளிரவு வரை தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களின் புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்த குழந்தைகளுக்கு இந்த மனித நேயத்துக்கு புறம்பான அனுபவம் அதிர்ச்சியாகவும் இருந்து உள்ளது. அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்குச் சென்ற தமிழர் ஒருவர் கொலை செய்யப்பட்டு உள்ளார். சிலர் பாதுகாப்புப் படையினரின் நெருக்குதல்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

புலம்பெயர்ந்து இங்கு பட்டதாரிகளாக உள்ள பலர் இன்னமும் தங்கள் படிப்பிற்கு ஏற்ற வேலைகளை பெறாமல் உள்ளனர். ஏனைய சிறுபான்மை சமூகங்களில் அதற்கான ஏற்பாடுகளை அவ்வின அமைப்புகள் செய்து வருகின்றன. ஆனால் இங்கு செயற்படும் தமிழ் கல்வி நிறுவனங்களில் வேலைக்குப் பயிற்சி தருகிறோம் என்று விட்டு தங்களுக்கு தெரிந்த சில வீட்டு முகவர் நிறுவனங்களிலும், கணக்காளர்களிடமும் அனுப்பி வைப்பார்கள். அவர்கள் நீங்கள் வரத்தேவையில்லை நாங்கள் சான்றிதழ் தருகிறோம் என்று கூறிவிடுவார்கள். ஏனென்றால் பயிற்சிக்கு வருபவர்கள் அங்கு கற்றுக் கொள்ள எதுவும் இல்லை. ஏன் இவர்கள் சற்று முயற்சி செய்து பயனுள்ள ஸ்தாபனங்களில் பயிற்சி எடுத்துக் கொடுக்கக் கூடாது. அது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமே. ஏமாற்றுவதை விட்டுவிட்டு உருப்படியான திட்டங்களைப் போடலாமே. நல்ல சம்பளம் பெற்று வேலை செய்யும் இவர்கள் சமூகத்திற்கு அதற்கான பலனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்படிப் புலம்பெயர்ந்தவர்கள் பல வகைப்பட்ட பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். தமிழனின் பெயரைச் சொல்லி வாழ்வதற்கும் அதற்கு கூடாரம் அடித்து கூட்டம் சேர்க்கவும் தமிழன் போட்டி போடுவான். தட்டிக் கேட்க வேண்டியதைக் கேட்க மட்டும் தயங்குவார்கள். எழுத்துச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் எனபது ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் பூனைக்கு மணிகட்டும் கதை போன்றது. தேசம் சஞ்சிகை பூனையின் கழுத்தில் மணியை கட்டிவிட்டது. சத்தம் பெரிதாகக் கேட்க வேண்டும் என்றால் நிறைய மணிகள் சேர்க்கப்பட வேண்டும்.□□□□□□□□□□□


# Langorf Hotel & Apartments

20 Frognal, Hampstead, London, NW3 6AG

## DO YOU NEED ACCOMODATION IN LONDON ?

Tastefully Furnished Hotel Bedrooms,

Self Catering Apartments or Flats Suitable for Families or Individuals.

Ten Minutes Away From Oxford Street.

We are pleased to offer 25% discount to any "Thesam" readers wanting accommodation in London.

Tel : 0207 794 4483
E : langorf@aol.com

Fax : 0207 435 9055
W : www.langorfhotel.com

தமிழில் தொடர்புகளுக்கு : 0208 732 2712




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# TR - TEC, TRC & TCHA
# குழப்பங்கள் தீரவில்லை

**TR-TEC தனாதிகாரியும் அதன் ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு எம் கனகராஜா தனாதிகாரியாக இருந்தும் தான் கணக்குகளை பார்க்க அனுமதிக்கப்படவில்லை எனக் கூறி தனது பதவியில் இருந்தும் உறுப்புரிமையில் இருந்தும் ஒக்ரோபர் 26ல் விலகினார். அவரது விலகல் கடிதத்தின் தமிழ் வடிவத்தை இங்கு காணலாம்.**

M Kanagarajah
Wilmer Way
London

Mr R Thavarajah
Chairman TR-TEC
221A Forest Rd
Walthamstow
London E17 6HE

26 October 2002

அன்புடன் தவராஜாவுக்கு
நீங்கள் 18ம் திகதியிட்டு அனுப்பிய கடிதமும் அதே திகதியிட்டு அனுப்பிய TR-TEC BOARD OF TRUSTREES கூட்டம் பற்றிய அறிவித்தலும் நேற்றுக் (25 ஒக்ரோபர் 2002) கிடைத்தது. நன்றி.

நான் உடனடியாக தற்பொழுதில் இருந்து TR-TEC BOARD OF TRUSTREES / DIRECTORS ன் தனாதிகாரி பொறுப்பில் இருந்தும் அதன் உறுப்புரிமையில் இருந்தும் விலகுகிறேன் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது விலகலுக்கான காரணங்கள் பின்வருமாறு :
01 நீங்கள் ஒத்துழைப்புத் தரவில்லை பதிலாக TR-TEC முகாமையாளர் திரு அ சிறிதரனால் திரிபுபடுத்தக் (manipulated by) கூடிய வகையில் நடந்து கொண்டீர்கள்.

02 மே மாதப் பகுதியில் செயலாளர் திரு ரி ஜீவரட்ணமும் நானும் சில பிரச்சினைகள் பற்றி முதலில் உங்களைச் சந்தித்த போது நீங்கள் மிகவும் ஆர்வம் காட்டியதுடன் அது பற்றிக் கலந்துரையாடவும் பிரச்சினையைத் தீர்க்கவும் தயாராக இருந்தீர்கள். எப்படியோ உங்களுடன் சில சந்திப்புகளுக்குப் பின்னர், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முகாமையாளருக்கு ஆதரவாக U - turn எடுத்தது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

03 நீங்களும் உங்கள் நெருங்கிய நண்பர்களும் கூட்டக் குறிப்புகளில் மாற்றங்கள் செய்வது பற்றி நான் கவனமாக உள்ளேன். கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் வராமல் இருந்த போதே அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டதாக பதிவு செய்யப்பட்டு இருப்பதுடன் அவர்கள் முக்கிய உறுப்பினர்களுக்கு எதிராக பலமான குற்றச்சாட்டுகளை வைத்ததாகவும் அதில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. தவறான கூட்டக் குறிப்புகள் நாம் கடமை செய்ய வேண்டிய அமைப்பின் நன்மதிப்பை பிரதிபலிக்காது.

04 BACS ஊடாக Barclays Bank க்கு அனுப்பப்படும் ஊழியர்களின் மாதாந்த சம்பளப் படிவம் என்னுடைய அல்லது அதிகாரமுடைய ஒருவரின் கையெழுத்தைக் கொண்டிருக்கவில்லை. நான் ஆரம்பத்தில் கையெழுத்திட்ட ஒரு படிவத்தில் உள்ள கையெழுத்து திருப்பித் திருப்பி பயன்படுத்தப்படுவதாகவே நான் விளங்கிக் கொள்கிறேன். உண்மையில் ஒவ்வொரு மாதாதந்த சம்பளப் படிவமும் வங்கிக்கு அனுப்பப்படும் போதும் என்னுடைய கையெழுத்து பெறப்பட வேண்டும். இது பற்றி பேச்சில் உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். இது விடயமாக நீங்கள் நடவடிக்கை எடுப்பதாக எனக்கு உறுதி அளித்து இருந்தீர்கள்.

நிருபர் ஒருவர் முகாமையாளருக்கு எவ்வளவு சம்பளம் வழங்குகிறீர்கள் எனக் கேட்ட போது நான் மனவருத்தமான நிலைக்குத் தள்ளப்பட்டேன். (TR-TEC ன் கணக்கு வழக்குகளுக்குப் பொறுப்பான தனாதிகாரியாக இருந்தும் பொது மக்கள் அமைப்பான TR-TEC ன் முகாமையாளரின் சம்பளம் எவ்வளவு என எனக்கு தெரியாமல் இருப்பது வருந்தத்தக்கது.) நான் கணக்கு வழக்குகளைப் பார்க்க அனுமதிக்கப்படாததால் முகாமையாளருக்கு எவ்வளவு சம்பளம் வழங்கப்படுகிறது என எனக்குத் தெரியாது என்பதை அந்த நிருபருக்கு சொல்ல வேண்டி இருந்தது.

05 TR-TEC ன் உறுப்பான London College of Technology ன் கணக்குகளை பார்ப்பதற்கும் எனக்கு அனுமதி இருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பதவி விலகிய தனாதிகாரி
எம் கனகராஜா

பதவியேற்ற தனாதிகாரி
எஸ் வி மூர்த்தி



06 நீண்டகாலமாக கணக்குகளையும் கணக்குப் புத்தகங்களையும் பார்ப்பதற்கு எனக்கு அனுமதி இருக்கவில்லை. அவை தொடர்ந்தும் ஒரு மாயமாகவே இருக்கிறது. மே மாதத்தில் உறுப்பினர்கள் சில முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக செயலாளர் சில ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு முகாமையாளர் சிறிதரனை கேட்டுக் கொண்டார். ஆனால் முகாமையாளர் அதனைச் செய்ய மறுத்து விட்டார். நீங்கள் தலைவராக இருந்து அதனைச் செய்ய வேண்டும் என்று உடன்பட்டிருந்தீர்கள் ஆனால் பின்னர் எதுவும் செய்யவில்லை.

07 TR-TEC ன் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தர்ம ஸ்தாபனங்களின் ஆணைக்குழு TR-TEC க்கு வருவதைத் தொடர்ந்து கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் நான் கலந்து கொண்ட போது திரு ஆர் விஜயகுமார் தானும் நீங்களும் கணக்குகளை பார்வையிட்டதாகவும் அதில் திருப்தி அடைந்ததாகவும் தெரிவித்தார். தனாதிகாரியாக இருந்த போதும் நான் ஓரங்கட்டப்பட்டது என்னை அவமதித்ததாகவே உணர்கிறேன்.


08 முகாமையாளர் சிறிதரனால் ஊழியர்களில் ஒருவரான திருமாறன் தொடர்ந்தும் பிரச்சினைகளுக்கு (harassment) உள்ளாவது பற்றித் தெரிவித்து இருந்தேன். நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முடிவில் நீங்கள் முகாமையாளருடன் சேர்ந்து திருமாறனை வேலை நீக்கம் செய்தீர்கள்.

09 நீங்களும் உங்கள் நண்பர்களும் சேர்ந்து செயலாளர் திரு ரி ஜீவரட்ணத்தை அவருடைய பதவியில் இருந்து நீக்கிவிட்டு திரு இ செல்வத்துரையை பதிலீடு செய்து உள்ளீர்கள். கூட்டத்திற்கான அறிவித்தல் உங்களிடம் இருந்து தான் வந்தது. ஏன் செல்வத்துரையிடம் இருந்து வரவில்லை? நீங்கள் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதில் பெரும் வறுமை காணப்படுகிறது.

10 LCT ன் இயக்குனர்கள் பற்றியும் அதனை TR-TEC trustees முகாமைத்துவம் செய்வது பற்றியும் தர்ம ஸ்தாபனங்களின் ஆணைக்குழு பல மாற்றங்களை குறிப்பிட்டு இருந்தது. இந்த மாற்றங்கள் சென்ற செப்ரம்பர் மாத முடிவில் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் ஏதாவது கூட்டங்கள் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் TR-TEC ன் பல உறுப்பினர்கள் அங்கு என்ன நடக்கிறது எனத் தெரியாமல் இருட்டில் வைக்கப்பட்டு இருப்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு உள்ளது. எல்லா விடயங்களும் தேநீர் அறையில் நடத்தப்பட்டு இரகசியமாக வைக்கப்படுகின்றன.

நான் பதவி விலகுவதற்கான சில காரணங்களை முன் வைத்து உள்ளேன். பல மாதங்களாக கவனமாக ஆராய்ந்தே இந்த முடிவுக்கு வந்தேன். என்னால் இயலுமான பல வழிகளில் TR-TEC க்கு எனது சேவையை வழங்கி இருக்கிறேன். மேலும் நான் TR-TEC ன் ஸ்தாபகர்களில் ஒருவன். உங்கள் தலைமைத்துவமும் சிறிதரனின் கேள்விக்குட்படாத முகாமைத்துவமும் TR-TEC யை கவலைக்குரிய நிலைக்கு கொண்டு வந்துவிட்டு உள்ளது. மேலும் TR-TEC க்கு தமது சேவையை வழங்க முன் வந்த மதிப்பிற்குரியவர்களிடம் மதிப்பிழந்தும் அவர்களை திருப்பி அனுப்பப்படும் நிலைக்கும் கொண்டு வந்து விட்டுள்ளீர்கள். எமது சமூகத்துக்கு உதவவே TR-TEC ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதனால் யார் பயனடைகிறார்கள் என்பதை அறிய எனக்கு ஆவலாக உள்ளது.

**Yours sincerely**



**M Kanagarajah**

கட்டுரை பின் குறிப்பு: அருகில் உள்ள கையெழுத்து திரு கனகராஜா ஆங்கிலத்தில் எழுதிய பதவி விலகல் கடிதத்தில் இட்ட கையெழுத்து. கனகராஜா தனாதிகாரிப் பதவியில் இருந்து விலகிய பின்னர் எஸ் வி மூர்த்தி என்பவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு உள்ளார். தமிழர் பொது அமைப்புகளில் நீங்களும் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தால் அங்கு தவறான போக்குகள் காணப்படுவதாக நீங்கள் நம்பினால் நாம் உங்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றோம். உங்கள் அடையாளம் உங்கள் அனுமதியின்றி வெளிப்படுத்தப்படாது என்பது உறுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Community
Legal Service

# TAMIL RELIEF CENTRE

Community House 311 Fore Street
Edmonton London N9 OPZ
Tel: 020 8373 6249 Fax: 020 8373 6250
E-mail: trc@teleregion.co.uk Website: www.teleregion.co.uk/trc

TRC

தேசம் இதழ் 10ல் "சீரற்ற—திறனற்ற—ஊழல் நிறைந்த : தமிழ் அமைப்புகள்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாக TRC எழுதிய குற்றச்சாட்டை இங்கு காண்கிறீர்கள். அக்கட்டுரை ஒருவரை வேலைக்கு அமர்த்தியதில் TRC மேற்கொண்ட நடைமுறைகள் சமசந்தர்ப்பக் (equal oppertunity) கொள்கைக்கு முரணாக இருந்ததை சுட்டிக்காட்டிக் காட்டியது. இது தொடர்பாக Corporation of London என்ற நிதி வழங்கும் நிறுவனம் TRCமீது மேற்கொண்ட விசாரணை முடிவில் வழங்கிய அறிக்கை உள்ளது. அதன் சாரம்சத்தை அருகில் காணலாம். வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது அனைவருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படுவதை பொது அமைப்புகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

21 நவம்பர் 2002

ஆசிரியர்
தேசம்
தபால் பெட்டி இலக்கம் 35806
லண்டன்

அன்புடையீர்,

## தமிழர் பொது அமைப்புக்கள்

நவம்பர் 2002 இதழ் 10 தேசம் சஞ்சிகையில், தாங்கள் தமிழ் நிவாரண நிலையம் சம்மந்தமான உண்மைக்கு புறம்பான சில தகவல்களை வெளியிட்டதையிட்டு எங்கள் செயற்குழு முதற்கண் அவர்களது விசனத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். மேலும் உங்களால் பிரசுரிக்கப்பட்ட செய்திபற்றிய உண்மையான விபரங்களையும் திருத்தங்களையும் பிரசுரிக்குமாறும் வேண்டுகின்றனர்.

1. உங்கள் செய்தியிற் கூறப்பட்டது போன்று நிரப்பப்பட்ட வெற்றிடம் மிகப்பொறுப்புவாய்ந்த பதவி அல்ல. இது ஒரு பகுதிநேர வேலையாளருக்கான ஒரு பதவியே. இதன் வாராந்த சம்பளம் 100 பவுணுக்கும் சற்று குறைவானது.

2. இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான விளம்பரம் இதற்கென மாத்திரம் தனியாக செய்யப்படவில்லை. வேறு இரு பதவிகளையும் நிரப்புவதற்கு ஒருங்கே செய்யப்பட்ட விளம்பரமே இதுவாகும்.

3. இப்பதவிக்கு மூவர் விண்ணப்பித்திருந்தனர். இதில் இருவர் தகுதி புள்ளவர்களென கருதப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு கேட்கப்பட்டனர். அவர்கள் இருவரிடமும் அதே பத்துக்கேள்விகள் கேட்கப்பட்டு ஐவர் கொண்ட ஒரு தெரிவுக்குழுவினால் புள்ளிகள் அளிக்கப்பட்ட பின்னரே தெரிவு நடந்தது. எனவே ஒருவரைவிட மற்றவர் கூடிய தகுதியைக் கொண்டிருந்தார் என்ற கேள்விக்கே இத்தேர்வில் இடம் இல்லை.

4. ஐவர் கொண்ட தேர்வுக்குழுவில், மூவர் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரரையும் இருவர் மற்றவரையும் சிபாரிசு செய்தனர். இந்த சிபாரிசின் அடிப்படையிலேயே செயற்குழு ஒருவருக்கு நியமனம் வழங்கியது. நியமனம் பெற்றவரின் உறவினர் எவரும் தெரிவுக்குழுவில் இடம் பெறவில்லை.

5. தன்னால் சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படாத காரணத்தினாலேயே தேர்வுக்குழு உறுப்பினர் ஒருவர் செயற்குழு முடிவை ஏற்றுக்கொள்ளாது இப்பதவிக்கான பண உதவியை வழங்கி இருந்த நிறுவனத்திற்கு முறையிட்டிருந்தார். இது பற்றி விசாரணை செய்த இந்நிறுவனம் இப்பதவிக்கான ஒரு பகுதி தொகையை வழங்கி இருக்கின்றனர். மிகுதி பணத்தை மூன்று மாதங்களின் பின் ஊழியரின் நியமனம் உறுதி செய்யப்பட்டதும் வழங்குவர்.

இவ்வண்ணம்

த பத்மநாதன்
செயலாளர்

Home Office · ENFIELD · London Government · COMMUNITY FUND Lottery money making a difference · member · OISC Exempted by OISC

Charity Registration No: 1069592 · Company Limited by Guarantee · Company Registration No: 3522986

CORPORATION OF LONDON



த ஜெயபாலன்

## TRC - குற்றச்சாட்டும் பதிலும்

TRC, Elders Project Worker என்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு மா□□ என்பவரை நியமிக்க மேற்கொண்ட முடிவு சமசந்தர்ப்பக் கொள்கைக்கு முரணாக இருந்ததை அவ்வமைப்பின் முன்னாள் முகாமைத்துவ இயக்குநரும் தற்போதைய இயக்குநர்களில் ஒருவருமான ரி ஜீவரட்ணம் நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினார். ஆனால் நிர்வாகம் அவரது முறைப்பாட்டை அசட்டை செய்ததை அடுத்து திரு ஜீவரட்ணம் இந்த தவறான நடைமுறையை அத்திட்டத்திற்கு நிதி வழங்கும் Corporation of London நிறுவனத்திற்கு யூலை 25ல் கடித மூலம் தெரிவித்தார்.

வேலைக்கு மா□□ஐ அமர்த்துவது என்று ஏற்கனவே முடிவுவெடுத்து விட்டு 900 பவுண் செலவில் 3 வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தப் பட்டதாகவும் பின்னர் ஒரு வெற்றிடம் நீக்கப்பட்டது என்றும் ஜீவரட்ணம் குறிப்பிட்டு உள்ளார். ஏப்ரல் 26ல் தற்காலிக பதவிக்கு நடைபெற்ற நேர்காணல் தேர்வில் மா□□ அதற்கு தகுதியானவர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதும் அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

4 பக்கங்கள் கொண்ட அக்கடிதத்தில் பணிக்கு அமர்த்தப்பட்ட மா□□, பரம்சோதி என்ற உறுப்பினரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் என்பது சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது. மேலும் மா□□ அதற்கு தகுதி இல்லாதவராக இருந்த போதும் பரம்சோதி மற்றும் திருமதி செல்லதுரை ஆகியோர் அவரைத் தெரிவு செய்வதற்கு பிரச்சாரம் செய்ததாகவும் அதில் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. இறுதி நேர்காணல் தேர்வுக்குழுவில் தலைவர் திரு பி. சிங்காரவேல், செயலாளர் திரு ரி.பத்மநாதன், உறுப்பினர் திருமதி செல்வதுரை ஆகியோர் மா□□க்கு சார்பாக புள்ளிகளை வழங்கி அவரைத் தெரிவு செய்தனர். இத்தெரிவில் சிங்காரவேல், பத்மநாதன் ஆகியோர் விதிமுறைகளுக்கு புறம்பாக நடந்து

www.tamilarangam.net



கொண்டதும் நேர்காணல் குழுவில் சுயாதீனமான (independent person) ஒருவர் இருத்தப்படாததும் சுட்டிக் காட்டப்பட்டு இருந்தது.

அப்போது முகாமைத்து இயக்குநராக இருந்த ஜீவரட்ணமும் முகாமையாளர் எஸ் தங்கராஜாவும் அப்பதவிக்காக விண்ணப்பித்து இறுதித் தேர்விற்குத் தெரிவு செய்யப்பட்ட மற்றைய பெண்ணுக்கு புள்ளிகளை வழங்கி இருந்தனர்.

ஒகஸ்ட் 15 ம் திகதி ஜீவரட்ணத்தினுடைய முறைப்பாட்டை விசாரித்த Corporation of London நிறுவன Monitoring & Evaluation Grants Officer, Jenny Field ஒகஸ்ட் மாதம் 30 திகதி தனது அறிக்கையை அனுப்பி வைத்தார். அதன் ஒரு பிரதி தேசம் சஞ்சிகைக்கும் எட்டியது.

மா□□க்கு அப்பதவி வழங்கப்பட்டு அத அவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதால்; அவரது பயிற்சி அல்லது தற்காலிக காலம் முடியும் வரைக்கும் TRC க்கு அவருடன் ஒப்பந்தம் உண்டு என்பதை ஜெனி பீல்ட் சுட்டிக்காட்டி உள்ளார்.

அவர் தான் அவதானித்தாக 4 விடயங்களையும் அறிவுறுத்தல்களையும் குறிப்பிட்டு உள்ளார்.

1. TRC யாப்பில் குறிப்பிட்டது போல் நேர்காணல் தேர்வுக் குழுவில் எப்போதும் கட்டாயமாக சுயாதீனமான ஒரு நபர் இருக்க வேண்டும். என்பீல்ட் CVS ல் இருந்து ஒருவர் கட்டணம் அறவிடாமலே தனது சேவையை வழங்கி இருப்பார் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

2. விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளை மட்டும் கருதாமல் அப்புள்ளிகள் வழங்கப்பட்டதற்கான காரணங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதன் பின்னர், தெரிவுக்குழு ஒரு முடிவுக்கு வர வேண்டும். TRC, மா□□ உடன் வேலை ஒப்பந்தத்தை மேற்கொண்டு விட்ட படியால் அம்முடிவு பற்றி இனி ஆராய முடியாது.

3. மா□□க்கு அவரது பயிற்சிக் காலப் பகுதியில் அவர் என்னென்ன இலக்ககுளை அடைய வேண்டும் என்பது தெளிவாக அவருக்கு வழங்கப்பட வேண்டும். தனது பயிற்ச்சிக் காலத்தில் அந்த இலக்குகளை அவர் அடைந்தாரா என்பது மதிப்பிடப்பட வேண்டும். இந்த மதிப்பீடு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் அவருக்கு அப்பதவியை வழங்கலாம். மதிப்பீடு ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாவிட்டால் அவரது பயிற்சிக் காலம் நீடிக்கப்பட வேண்டும் அல்லது அப்பதவியை அவருக்கு உறுதிப்படுத்தக் கூடாது.

4. தெரிவுக்குழு பற்றி ஏதும் அபிப்பிராயங்கள் இருந்திருந்தால், மா□□க்கு அப்பதவி வழங்கப்படு முன்னர் அது முன்வைக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படைகளில் 31 ஒக்ரோபர் வரைக்குமான 3 மாதங்களிற்கான நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. மிகுதித் தொகை மா□□ அப்பதவிக்கு உறுதிப்படுத்தப்படுகிறாரா? இல்லையா? என்பதைப் பொறுத்து வழங்கப்படும் என்றும் ஜெனி பீல்ட் தெரிவித்து உள்ளார்.□□□□

## TCHA கூட்டத்தில் சலசலப்பு

மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில 40 பேர் வரை கலந்து கொண்ட TCHA கூட்டம் ஒக்ரோபர் 1ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் TCHA ன் ஒரு பிரிவினர் தலைவர் என் ராம்ராஜும் செயலாளராகச் செயற்படும் ஆர் ஜெயதேவன் அணியிலும் எதிர்த் தரப்பினர் கவுன்சிலர் செல்வி எலிசபத் மஅன், நவநாயகம் அணியிலுமாக கலந்துகொண்டனர். எதிரணியினர் ராம்ராஜும் ஜெயதேவனும் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் கூறி அவர்களுக்கு எதிராக தீர்மானங்களைக் கொண்டு வர முற்பட்டனர்.

இக் கூட்டத்தில் இரு அணிகளுக்கும் இடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றது. தலைவர் ராம்ராஜ் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த மஅன் - நவா அணியினர் அக்கூட்டத்தை ராம்ராஜ் தலைமை தாங்கி நடத்த எதிர்ப்புத் தெரிவித்து, எஸ் வி மூர்த்தியை தலைமைக் கதிரையில் அமர்த்தினர். அதனால் ராம்ராஜ் - ஜெயதேவன் அணி பவுன்சர்களை நாடியது. பவுன்சர்கள் எஸ் வி மூர்த்தியை தூக்கி வெளியேற்ற அவரை நெருங்கினர். மஅன் உடனடியாக முன்வந்து ".. do not touch him...." என்று அதிகாரத்துடன் உரத்துக் கூறினார். உடனே பெண்கள் எழுந்து மூர்த்தியை பவுண்சர்ஸ் நெருங்கவிடாது குரல் எழுப்பினர். இதனை சற்றும் எதிர்பாராத பவுண்ஸர்ஸ் திகைத்து நின்றனர். நிலைமையை சமாளிக்க இந்திரன் என்பவர் எழுந்து வந்து எஸ் வி மூர்த்தியை அழைத்துச் சென்றார்.

பின்னர் நிறுவனத்தின் ஆண்டு கணக்கு விபரங்களை இந்திரன் கேட்டார். ஆனால் அது சமர்ப்பிக்கப்படாததை அடுத்து மஅன் - நவநாயகம் அணியினர் வெளிநடப்புச் செய்தனர். மார்ச் 2001 - ஏப்ரல் 2002 நிதி ஆண்டு கணக்கின்படி வாடகை வருமானம் அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 215,000 பவுணால் வீழ்ச்சி அடைந்து இருக்கிறது. ஆனால் வீட்டு முகாமைத்துவ செலவீனம் முந்தைய அண்டைக் காட்டிலும் 51,000 பவுணால் அதிகரித்த உள்ளது. இந்த வருமான வீழ்ச்சியும் செலவு அதிகரிப்பும் ஜெயதேவனதும் முகாமைத்துவ குழுவினதும் செயற்திறமின்மையை காட்டுவதாக எதிர் அணியினர் தெரிவிக்கின்றனர். அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் ஜெயதேவன் - ராம்ராஜ் கூட்டு வழக்குகளுக்கும் கூட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் பொதுப் பணத்தை அள்ளி வீசுவதாக குற்றம் சாட்டினர். மேலும் நட்டஈடாக பல ஆயிரங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இதயங்கள் துடிக்கட்டும்



ராஜேஸ்வரி
பாலசுப்பிரமணியம்
MA - Medical Anthroplogy

இன்று இலங்கைத் தமிழர்களில் மிக வேக மாகப் பரவி வரும் சோகம் அகால மரணங்களாகும். இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் ஆசிய மக்களு க்குக் காலனாக வரும் வியாதிகளில் இருதய வருத்தங்கள் மிகவும் முன்னணியில் இருக்கின்றன. இங்கிலாந்தில் ஒரு வருடத்திற்கு 140,000 மக்கள் இருதய வருத்தங்களால் இறந்து போவதாகச் சொல்லப்படுகின்றது. புகைபிடிப்பதால் 120,000 மக்கள் இறந்து போகிறார்களாம். (Metro, May 9th 2002.9.9.)

இங்கிலாந்து மக்களை விட எங்கள் இனத் தவர்கள் (ஆசிய நாட்டார்) மிகவும் எளிதில் இந்த நோய்க்கு ஆளாகிறார்கள். இருதய வியாதிகள் ஆரம்பிக்கும் காலகட்டமும் மிகவும் இளமைக் காலமாக இருக்கின்றது. 1991ம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டின்படி மொத்தக் குடித்தொகை 58 கோடி (58 மில்லியன்). இதில் 6 வீதமானோர் 2 கோடி (2 மில்லியன்) வெள்ளையரல்லாதோர். ஆனால் இருதய வருத்தம் வருபவர்களைப் பார்த்தால் ஆசிய நாட்டு மக்கள் மிகவும் கூடிய வீதத்தில் பாதிக்கப் படுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று வைத்தியத்துறையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் இருதய நோய்களால் இறப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களே. ஆனால் ஆசிய நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் 46 வீதமான பெண்களும் 36 வீதமான ஆண்களும் இருதய நோய்க்கு ஆளாகி றார்கள். மேற்கு நாட்டாருக்கு இருதய நோய் நடுத்தர வயதுக்குப் பின் தான் பெரும்பாலும் வரும். ஆனால் எங்கள் இனத்தோரைப் பார்த்தால் 35 வயதுக்குள்ளேயே தொடங்குவதுமுண்டு.

## இருதய நோய்க்கான காரணிள் :

01. புகைபிடித்தல் (smoking)
02. கொழுப்பு உணவுகளை உண்ணுதல் (fatty diet)
03. உயர் இரத்த அழுத்தம் (high blood pressure)
04. கூடிய மன அழுத்தம் (stress)
05. வயதும் ஆண் பெண் வித்தியாசங்களும் (age & gender)
06. பரம்பரைக்காரணிகள் (Heredity)
07. அளவுக்கு மீறி மது அருந்துதல் (Alcohol)
08. அளவுக்கு மீறிய உடல் எடை (obesity)
09. உடம்பைச் சோம்பேறித்தனமாக வைத்திருத்தல் (Lack of exercise)
10. இனரீதியான காரணிகள் (Race)

இந்தப் பத்துக் காரணிகளில் எங்களவர் என்னென்னவற்றைக் கொண்டிருக்கிறார்கள் என்று யோசித்துப் பார்க்கலாம்.

சினிமா நடிகர்களைப் பார்த்து புகைபிடிக் கும் இளைஞர்கள் கூடிக்கொண்டு வருகிறார்கள். சிகரெட்டை விற்பதற்காக விளம்பர ஸ்தாபனங்கள் நடிகர்களுக்கு நிறையப் பணம் கொடுக்கின்றது. இவர்களைப் பார்த்து காப்பி அடிக்கும் இளைஞர்கள் தங்கள் காசைக் கரியாக்குவதற்குப் பதில் இருதயத் தையும் அரித்துக் கொள்கின்றார்கள்.

அடுத்த காரணியான கொழுப்புச் சாப்பாடு கள் பற்றி எங்களுக்குச் சொல்லவா வேண்டும்? சோறும் புட்டும் பொரியலும் வடையும் பக்கோடாவும் வாய்க்கு ருசி தான். ஆனால் சுகத்திற்கு எதிர்.

அடுத்ததாக எங்கள் வாழ்க்கை முறையால் பலர் உயர் இரத்த அழுத்தத்தால் கஷ்டப்படுகிறார் கள். அளவுக்கு மீறிய யோசனை, எதிர்பார்ப்பு, தோல்வி என்று எத்தனையோ காரணிகள் உயர் இரத்த அழுத்தத்தையுண்டாக்கும்.

நான்காவது காரணியான மன அழுத்தம் பற்றி யாருக்கும் பெரிதாகச் சொல்லத் தேவை யில்லை. குடும்பப் பாரம், புதிய நாடு, தொழில் பிரச்சினை, காதல், கல்யாணப் பிரச்சினை என்று எத்தனையோ விடயங்கள் மன அழுத்தத்தைத் தரும். ஆங்கிலேயர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் இல்லையா என்று கேட்கலாம். ஆனால் ஆங்கிலே யரின் வாழ்க்கை முறை வித்தியாசமானது. அவர்க ளுக்குச் சீதனப்பிரச்சினை கிடையாது. குடும்பப்பாரம் என்று எங்களைப் போல் பலரின் விடயங்களைத் தலையில் போட்டுக் கொள்வதில்லை.

வயதையும் ஆண், பெண் வித்தியாசத்தை யும் பொறுத்தவரையில் பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் வயதில் நடக்கும் சுரப்பி மாற்றங்களின் காரணமாக இருதய வருத்தங்கள் வரலாம். 35க்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



44க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆண்களுக்கு இருதய வருத்தம் வரும் சாத்தியம் ஆறு மடங்காக இருக்கும்.

தாய் தகப்பனுக்கு இருதய வருத்தம் இருந்தால் குடும்பத்தில் யாருக்காவது வரும் சாத்தியம் உண்டு. இருதய நோய்கள் மட்டுமல்ல நீரிழிவும் (Diabetes) பரம்பரையாகத் தொடரலாம்.

அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்று கூறியவர்கள் எங்கள் மூதாதையோர். மது குடிப்போர் அளவுடன் பாவிக்காமல் அளவுக்கு மீறினால் இருதய நோய்களை வரும் வாய்ப்புள்ளது.

உடல் எடையையும் அளவோடு வைத்திருத்தல் நலம். எங்கள் கை முஷ்டியளவுள்ள இருதயம் உடலுக்குள் இடைவிடாமல் குருதியை அனுப்பிக் கொண்டிருக்கிறது. அளவுக்கு மீறிய எடை உயர் அழுத்தத்தை உண்டாக்கும். இதன் தொடர்பாக இருதய வருத்தங்களும் வரும்.

அடுத்தது எங்கள் இன மக்கள் உடற்பயிற்சிகளில் கவனமெடுக்காது வாழ்வதும் இருதய நோய்வர ஒரு காரணியாக அமைகிறது. இப்போதெல்லாம் பெரும்பாலோர் கார் வைத்திருப்பதால் நடக்கத் தெரியாமல் தவிக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு சினிமா என்று வீட்டில் ஒரே இடத்திலிருந்து பார்க்கிறார்கள். இதெல்லாம் உடம்பின் சுகத்தைப் பாதிக்கிறது. எவ்வளவு தூரம் உடம்பு ஆடி அசைகிறதோ அவ்வளவு தூரம் இருதயத்திற்கும் நன்மை தரும்.

கடைசியாகச் சொல்ல வேண்டியது இருதய வருத்தம் எங்கள் இன மக்களைக் கூடுதலாகப் பாதிக்கிறது. இதற்கு எங்கள் வாழ்க்கை முறை வாழ்க்கையை நடத்தும் விதம் என்பன பின்னணியாக இருக்கலாம்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற மாதிரி எத்தனையோ பேர் தங்கள் அரசியல் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள எத்தனையோ நாடுகளில் குடியேறியிருக்கின்றோம். வந்தடைந்த நாடுகளின் சுவாத்தியம், சாப்பாடு, வாழ்க்கை முறை எங்கள் வாழ்க்கை முறைக்கு வித்தியாசமானது. எத்தனையோ வசதிகள் இருந்தும் எங்களில் பலர் இருதய நோயை எப்படித் தடுப்பது என்று தெரியாமல் இருப்பது நல்லதல்ல.

எங்களை நம்பியிருக்கும் இளம் சந்ததியினருக்கு எங்களின் ஆரோக்கியமான வாழ்க்கை நிச்சயம் தேவை. கவனமாக இருந்தால் இதய நோய்கள் வராமல் தடுக்கலாம்.□□□□□□□□□□□□

# ஏன் நாம் இதய நோய் பற்றி விழிப்படைய வேண்டும்?




உலகில் நிமிடத்திற்கு 32 பேர் இதய நோயால் இறக்கிறார்கள்.(உலக சுகாதார நிறுவனம்)

ஆண்டுக்கு 17 மில்லியன் பேர் அண்ணளவாக இலங்கையின் மொத்த சனத்தொகை அளவானோர் இதய நோயினால் இறக்கின்றனர்.

உலக சனத்தொகையில் அரைப்பங்கை கொண்டிருக்கும் தமிழினம் உட்பட்ட தென்னாசிய சீன இனத்தவர்களிடையே இந்நோய் பெருமளவில் காணப்படுகிறது.

பிரித்தானியாவில் வாழும் தென்னாசிய இனத்தவர்களில் மற்றைய இனத்தவர்களைக் காட்டிலும் அதிக அளவில் இதய நோய் ஏற்படுகிறது.

ஐரோப்பாவில் பிரித்தானியாவிலேயே அதிகமானோர் இதய நோய்க்கு ஆளாகின்றனர். பிரித்தானியாவில் ஆண்டுக்கு 250,000 பேர் இதயநோயால் மரணமடைகின்றனர். இங்கு ஏற்படும் இரண்டில் ஒரு மரணத்திற்கு இதய நோய் காரணமாக இருக்கிறது.

இலங்கையில் ஏற்படும் மொத்த மரணங்களில் 17 வீதமான மரணங்கள் இதய நோயால் ஏற்படுகிறது.

(தகவல் : உலக சுகாதார நிறுவனம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**புலம்பெயர்ந்த கலைஞர்கள் தரமான படைப்புகளை உருவாக்கும் வகையில் தமது திறமைகளையும் தொழில்நுட்ப அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ் வேண்டும் ஈழம் வேண்டும் என்பவர்கள் புலம் பெயர்ந்த தமிழர் படைப்புகளுக்கு கை கொடுக்க முன்வரவேண்டும். தவறினால் இலங்கைத் தமிழ் சினிமா மறைந்து போனது போல் சென்னைத் தாயாரிப்புகளில் தங்கியுள்ள புலம்பெயர் தமிழ் தொலைக்காட்சிகளும் காணாமல் போகும் அபாயம் உண்டு.**

# மாற்றம் தேடும் சினிமாவும் மாறாத கலைஞர்களும்



**அஜீவன்**
குறும்பட இயக்குனர்
சுவிஸ் மூவி கிளப்
உத்தியோகபூர்வ உறுப்பினர்

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஏனைய புலம்பெயர் சமூகங்கள் போல் நாமும் புலம்பெயர் தமிழ் சினிமா ஒன்றை ஜெனிக்க வைப்பதற்கு ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

சாதாரணமாகவே பொழுதுபோக்கான சினிமாவுக்கு கொடுக்கும் வரவேற்பை யதார்த்தமான சினிமாவுக்கு மக்கள் கொடுக்காதது வருத்தத்திற்கு உரியது. ஏனைய சமூகங்களைவிட தமிழ்ச் சமூகம் பொழுதுபோக்கு சினிமாவைத்தான் விரும்புகின்றது.

இதுவரை யதார்த்த சினிமா பற்றி ஏனோ தானோ என்ற மனோநிலையில் சிந்திக்க மறந்து விட்டாலும் கூட, அது சற்று மாற்றம் பெற்றிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. அதற்கு இன்றைய அரசியல் மற்றும் புலம்பெயர் மாற்றங்களும் புதிய சிந்தனைகளும் ஒருவகையில் காரணிகளாகின்றன.

தென்னிந்திய கனவுலக சினிமாவுக்குப் பழகிப்போன சாதாரண மக்களை யதார்த்த சினிமாவுக்குள் தள்ளி அதை இரசிக்க வைப்பது மிகக் கடினம். புலம்பெயர் தமிழ் சினிமா ஒன்று உருவாக வேண்டுமென்று ஆதங்கப்படுபவர்கள், தமிழக சினிமாவை எதிர்ப்பதா, ஆதரிப்பதா, அங்கிருந்து எதையாவது கற்றுக்கொள்வதா எனும் கேள்வியை முதலில் தமக்குள்ளே எழுப்பிக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் பரந்து வாழும் இந்தியத் தமிழர்களை மட்டுமல்ல, ஏனைய நாட்டுத் தமிழ் பேசும் மக்களையும் கவரும் விதத்தில் தென்னிந்தியத் தமிழ்ப்படங்கள் வரவேற்பையும் வளர்ச்சியையும் பெற்றிருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

தமிழகத் தலைநகரான சென்னையிலுள்ள சினிமா தொழில்நுட்பக் கூடங்கள் ஆசியாவிலேயே சிறந்த தொழில்நுட்பக் கூடங்களாகத் திகழ்கின்றன. இங்கே தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஆங்கிலப் படங்களுக்குக் கிடைக்கும் வசூலைப் பெறாவிடினும், ஆங்கிலப்படங்களுக்கு நிகரான தொழில்நுட்பம் பெற்றிருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

புலம்பெயர்ந்த வெளிநாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்களை, தென்னிந்தியத் தமிழ்ப் படங்களைப் பார்க்காதீர்கள் என்றால், அவர்களுக்காக உருப்படியாக ஏதாவது படைப்புக்களை கொண்டு வருகிறோமா என்றால் வாய்மூடி மௌனமாவதைத் தவிர வேறுவழி கிடையாது. தென்னிந்திய மற்றும் உலக சினிமாக்களை எதிர்ப்பதை விட்டு, அவற்றிலிருந்து சினிமா ஒன்றைப் படைக்கவும், அதை வேறுபடுத்திப் பார்த்து ஆதரவளிக்கவும் அனைவரும் முன்வர வேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் இருந்து அத்தி பூப்பது போல் ஆண்டொன்றுக்கு ஏதோ ஒன்று அல்லது இரண்டு வந்து வெற்றி பெற்றுவிட்டால் அது ஒரு சாதனை என எண்ணுவது மடமையானது. அனைத்துப் பகுதிகளிலிருந்தும் படைப்புக்கள் புதிது புதிதாக உருவாக்கம் பெற வேண்டும். வேறுபட்ட நாடுகளிலிருந்து மாறுபட்ட அனுபவங்களாக அவை அமையும் போது அவை வித்தியாசமாகவே இருக்கும். அவை நிச்சயம் மக்களால் வரவேற்கப்படும்.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் சினிமாக்களில் பணியாற்றிய பல கலைஞர்கள் புலம் பெயர் நாடுகளில் இருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலருக்கு சினிமாத்துறை பற்றிய ஒரு கல்வி அறிவு அல்லது அனுபவம் இருக்கிறது. இவர்களது பெரிய குறை, அனைத்தும் தமக்குத் தெரியும் என்று தமக்குத் தாமே கிரீடம் சூட்டிக் கொள்வது தான். இதனால் இவர்கள் ஏனைய திறமையுள்ள கலைஞர் ஒருவருடன் சேர்ந்து எதுவும் செய்யாது, தனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலையிலேயே அனைத்தையும் போட்டுக் கொண்டு செயல்படத் துடிக்கிறார்கள். இதற்கு மிக முக்கிய காரணம் தான் அடுத்தவர் முன் தாழ்ந்து விடுவேனோ எனும் தாழ்வு மனப்பான்மை தான்.

அத்துடன் ஒரு குழுவாகச் சேர்ந்து செய்யும் அனைத்துக்கும் தானே முழு உரிமையும் கோர முற்பட்டு அடுத்தவர்களை மலினப்படுத்திச் சில படைப்புகளை புஸ்வாணமாக்கி விடுகிறார்கள். இல்லாவிட்டால் எதுவுமே தெரியாத அப்பாவிகளான புதிய கலைஞர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து தம் சுயவிளம்பரத்துக்காக அவர்களைப் பலிக்கடாவாக்கித் தாம் தப்பிக் கொள்கிறார்கள்.

இன்னுமொரு சாரார், கதை, திரைக்கதை இயக்கம் ஆகியவற்றோடு கதாநாயகனாகவும் நடிக்க வேண்டுமென்று நினைப்பவர்கள். இப்படியான சிலர் தாம் கதை சொல்லி, ஒரு இயக்குநர் போல் பல பகுதிகளை சொல்லிக்கொண்டு வரும் போது எங்கோ பார்த்த சில படங்களை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து மலினப்படுத்துகிறார்கள். சினிமா சில நெறிமுறைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு உருவாகும் ஒரு கலை. நினைத்ததை நினைத்த இடத்தில் புகுத்தும் ஒரு கலையல்ல.

இது தவிர மேடை நாடகத்துக்கும் சினிமாவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட பலரால் வேறுபடுத்திப் பார்க்க முடியாமலிருக்கிறது. புலம் பெயர் தமிழ் சினிமா என்று வந்த பல படைப்புகளில் உள்ள பெரியதொரு குறை இலங்கைத் தமிழையும், இந்தியத் தமிழையும், நாடக வசன நடைகளையும் புகுத்தி பார்வையாளனைப் பைத்தியக்காரனாக்க முற்படுவது. இப்படியான ஒரு சில படங்களை பார்வையிடும் பார்வையாளர்கள் படும் அவஸ்தையும் நகைப்பும் புலம்பெயர் சினிமா ஆர்வலர்களை புண்படுத்துகின்றது.

பணபலமும் ஆர்வமும் மட்டுமே ஒருவனை படைப்பாளியாக்கி விடுவதில்லை. ஒரு திரைப் படத்தைப் பார்த்து விட்டு அப்படத்தின் கதையைச் சொல்வது கடினமல்ல. ஒரு கதைக்கருவை பார்வையாளன் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் திரையில் செதுக்குபவன் மட்டுமே படைப்பாளியாக முடியும்.

மனித எண்ணங்களில் தோன்றும் அனைத்தையும் திரையில் காட்ட முடியாது. உதாரணமாக "மாலைப் பொழுதின் மயக்கத்தில் தத்தளிக்கும் ஆதவனுக்கு ஆறுதலளிக்கும் எண்ணத்தில் அவள் தன் பொன்னிறக் கூந்தலை மேனியில் படரவிட்டவாறு அன்னமாக நடந்து வந்து கொண்டிருந்தாள்" என்பதை பாட்டிலோ, எழுத்திலோ வடித்து விடலாம். ஆனால் அதை திரையில் வடிப்பது மிகக் கடினம். ஏன் முடியாது எனக் கேட்கத் தோன்றும்.

சற்று முயன்ற பார்த்தால் மட்டுமே அதன் விபரீதம் புரியும். மாலைப் பொழுதில் அதவன் மறைவதையும் அவள் நடந்து வருவதையும் காட்டலாம். அது ஒரு பெண் கூந்தலை மேனியில் படரவிட்டவாறு, மாலை நேரத்தில் நடந்து வருவதைத்தான் சொல்லுமே தவிர, அவள் ஆதவன் மயக்கத்தில் தத்தளிப்பதையோ, அவள் அன்னமாக ஆதவனுக்கு ஆறுதல் தர வருவது போன்றோ ஒரு போதும் எடுத்துக்காட்டாது. கற்பனைக்கும் சினிமாவுக்கும் நிறையவே வித்தியாசமுண்டு. எந்தவொரு நிகழ்வையும் மூளை கிரகித்துக் கொள்ளச் சிறிது காலமெடுக்கின்றது. அது ஆளுக்கு ஆள் வித்தியாசப்படுகிறது. சினிமா பல்வேறு தரப்பட்ட மக்களை ஈர்க்கும் ஒரு கலை. எனவே எல்லா ரசிகர்களாலும் ஏற்றுக் கொள்ளும் தன்மைக்கு ஏற்பவே ஒரு படைப்பை மக்கள் முன் வைக்க வேண்டும். சமூகத்துக்குப் போய்ச் சேராத, பார்வையாளனின் ஏற்றுக்கொள்ளல் மூலம் அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு கலை வடிவமானாலும் அது பயனற்றது.

இது போன்ற இடையூறுகள் மத்தியில் ஒரு சில படைப்புகள் அத்தி பூத்தாற்போல் பூக்க முயன்று மொட்டிலேயே கருகிவிடுவது மிக மிக வேதனையானது. அப்படி வரும் படைப்புகள் பற்றிய விமர்சனங்கள் கூட மிகவும் அரிதாகவே எழுதப்படுகின்றன. சிலர் படைப்பை விமர்சிப்பதை விடுத்து படைப்பாளியை விமர்சிக்கத் தொடங்கி விடுகிறார்கள். ஒரு சிலர் படைப்பாளியின் படைப்பை விட அவனது பூர்வீகத்தைத் தெரிந்து கொள்ளவே பிரயத்தனப்படுகிறார்கள்.

தொடர்பு சாதனங்கள், மற்றும் ஊடகங்கள் இவற்றை மக்கள் முன் கொண்டு வந்தார்களேயானால் இன்று பெருவாரியான கலைஞர்களும் கலைப் படைப்புக்களும் எம்முன் இருந்திருக்கும். எனவே இனியும் இக்குறுகிய நோக்கத்தை மாற்றும் பொறுப்பு எமது புலம்பெயர், மக்கள் தொடர்பு சாதனங்கள் மற்றும் ஊடகங்களுக்கும், விமர்சகர்களுக்கும் உண்டு. இவர்களுக்கிடையிலும் புதுப் படைப்புகள் உருவாக அவா கொள்ளும் மனித நேயம் மிக்க ரசிகர்களும் விமர்சகர்களும் பல கலைஞர்களுக்கு உரமாகி இருப்பது ஆறுதலான விடயம் தான்.

ஏனைய உலக படைப்புகளை வரவேற்று அவர்களிடமிருந்து புதியவற்றைக் கற்றுக் கொண்டே எமது படைப்புகளை உருவாக்க முயல வேண்டும். ஆரம்ப அறிவைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு உருப்படியான திரைவடிவத்தை உருவாக்கமுடியாது. அதை சினிமாத்துறை சார்ந்தோர் உடனடியாகச் செய்ய வேண்டும்.

தரமான புது வரவுகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் மட்டுமே புலம்பெயர் படைப்புகளுக்காக மக்களை ஏங்க வைக்கலாம். ஆகவே மாற்றம் தேடும் புலம்பெயர் சினிமாவுக்கு ஈடுகொடுக்கும் வகையில் புலம்பெயர் கலைஞர்களும் மாறவேண்டும். அதுவே வளர்ச்சிக்கு அடிப்படை.□□□□□□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ்களின் தொடர்ச்சி :
புராதன யாழ்ப்பாணத்தில் கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் அடைந்த மக்கள் கூட்டாக வாழ்ந்தனர். கி.மு 500ம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாக விளங்கியது. நாகர் என அழைக்கப்பட்ட திராவிட இனத்தவர்களே அங்கு வாழ்ந்தார்கள். மகாவம்சம் குறிப்பிடும் நாகதீபமும் மணிமேகலையில் நாகநாடு மணிபல்லவம் ஆகிய பெயர்களால் குறிப்பிடப்படும் நாடும் இன்றைய யாழ்ப்பாண மண்ணே. இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு மணிபல்லவம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட பண்டைய யாழ்ப்பாணத்தில் பிறந்த தொண்டைமான் இளந்திரையனே காஞ்சியில் தலைநகர் அமைத்து பல்லவ அரச வம்சாவழியை ஆரம்பித்து வைத்த மன்னன். இம்மன்னனது பெயர் கொண்ட 'தொண்டைமான் ஆறு' இன்றைக்கும் யாழ்ப்பாண மண்ணில் ஓடிக்கொண்டிருக்கின்றது.

**கந்தரோடை முதல் காஞ்சி வரை (3)**

# மணிபல்லவத் தொண்டைமான்



Dr எஸ் தியாகராஜா

## பௌத்தமும் தமிழரும்

இன்று இலங்கையில் பௌத்தம் சிங்கள மக்கள் கடைப்பிடிக்கும் மதமாக இருப்பினும், சரித்திர காலத்தில் பௌத்தம் தமிழ் மக்களின் முக்கியமான மதங்களில் ஒன்றாகவே இருந்தது.(10)

கி.மு.400 முதல் கி.பி.600 வரை ஆயிரம் ஆண்டுகளாக பௌத்தம் தமிழகத்தில் பிரபல்யமான ஒரு மதமாக இருந்துள்ளது. ஆறாம் நூற்றாண்டின் பின்னரே சைவசமயக் குரவர்களும், நாயன்மார்களும் தோன்றி பௌத்தத்தை தமிழகத்திலிருந்து முற்றாக இல்லாதொழித்தனர்.

1. இலங்கையிலும் இந்தியாவிலும் கண்டெடுக்கப்பட்ட கி.மு.200ம் ஆண்டிற்குரிய "பௌத்த சக்கரம்" என்றழைக்கப்படும் நாணயங்கள், தமிழகத்தின் பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களே எனப் பிரித்தானிய அகழ்வாராய்ச்சியாளர்கள் இனம் காணுகின்றார்கள்.(11)

2. கி.மு.300ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் கொற்கைப் பாண்டியர்கள் யானையைத் தங்கள் அரச சின்னமாகக் கொண்டிருந்தது அவர்களது பௌத்த மத சார்பைக் குறிப்பதாக நாணய இயல் வல்லுநர் லோவந்தால் கருதுகிறார்.(12)

கி.பி.25ஆம் ஆண்டில் பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியை ஆரம்பித்த பின்னரே தங்கள் சின்னத்தை மீனாக மாற்றினார்கள். மீன் சின்னமும் பௌத்தமதச் சின்னமே என லோவந்தால் தெரிவிக்கிறார்.(13)

3. தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலைக்கு இணையான ஒரு பௌத்த மத காவியம் இன்றுவரை உலகில் வேறு எந்த மொழியிலுமே உருவாகவில்லை என்பதே பல மேலைநாட்டு அறிஞர்களின் அபிப்பிராயம்.(14)

4. காவிரிப்பூம்பட்டினத்திலும், நாகைப்பட்டினத்திலும் நடைபெற்ற அகழ்வுகளில் காணப்பட்ட; கிறீஸ்தவ காலத்திற்கு முற்பட்ட, பௌத்த விகாரங்களின் அடித்தளங்களும், பௌத்த ஸ்தூபிகளும், கருவூலங்களும், புத்தபிரானின் உருவச் சிலைகளும்; தமிழகத்தில் பௌத்தமதம் பரவியிருந்த ஒரு காலகட்டத்தை எடுத்துக்காட்டுகின்றன.(15)

இவ்வாறே கந்தரோடை அகழ்வுகளில் காணப்பட்ட பௌத்த மதச் சின்னங்கள் அக்கால மக்கள் மேற்கொண்ட மதச்சார்புகளை எடுத்துக் காட்டுகிறதேயன்றி வேறேதும் அர்த்தமில்லை.

கந்தரோடையில் பௌத்த மதச் சின்னங்கள் காணப்படுவதால் அவ்விடத்தில் ஒரு காலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் எனச் சமீபகாலத்தில் ஈழத்தவர் வரலாற்றை எழுதிய ஓர் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது அபத்தமான வாதமாகும்.

"மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் ஒரு பௌத்த மத காவியம் எழுதினார். ஆகவே இவர் ஒரு சிங்களவர்" என்று சொல்வது போல இருக்கிறது இந்த வாதம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோற்றமும் வரலாறும்

# மணிபல்லவத் தொண்டைமான்

## நாகபுரம்

"நாகபுரமிது; நன்னகர் ஆள்வோன்
பூமிசந்திரன் மகன் புண்ணியராசன்;
ஈங்கிவன் பிறந்த அந்நாள் தொட்டும்
ஓங்குயர் வானத்து பெயல் பிழைப்பு அறியாது
மண்ணும் மரனும் வளம் பல தரு உம்
உண்ணின் றுருக்கும் நோயுயிர்க்கு இல்லென"
மணிமேகலை: காதை 14: வரி 169-174

நாகநாட்டின் தலைநகர் நாகபுரம். இந்நகரை அரசாள்பவன் பூமிசந்திரன் மகனான புண்ணியராசன். இந்த நாட்டில் இவன் பிறந்த நாளிலிருந்து, ஓங்கி உயர்ந்த வானத்திலிருந்து மழை பெய்து கொண்டே உள்ளது. நிலங்களிலிருந்தும் மரங்களிலிருந்தும் மக்களுக்கு எல்லா வகையான வளங்களும் கிடைக்கிறது. உள்ளகத்தே நிலைபெற்று வருத்தும் நோய் ஏதும் இங்கே கிடையாது என்கிறார் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்.

## பீலிவளை

நாகநாட்டை ஆட்சி செய்யும் மன்னன் வாகை சூடிய வேற்படையை உடையவன். வேல் வித்தையிலே நிகரற்று "வளைவாணன்" எனப் பெயர் பெற்றவன். அவனது மனைவி வாசமயிலை. அவளது வயிற்றில் பிறந்த பெண் பீலிவளை.

"நாகநாடு நடுக்கின்றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன் தேவி
வாசை மயிலை வயிற்றில் தோன்றிய
பீலிவளை என்போள் பிறந்த அந்நாள்"
மணிமேகலை: காதை 24: வரி 54-57.

## கிள்ளிவளவன்

பிலிவளை வளர்ந்து பெரியவள் ஆகிறாள். பூம்புகார் நகரத்திற்குப் பெற்றோர்களுடன் இந்திர விழாவைக் காணச் சென்ற சமயத்தில் ஒரு நாள் சோழ மன்னன் கிள்ளிவளவனைச் சந்திக்கிறாள்.

"பூநாறு சோலை யாருமில் ஒரு சிறைத்
தானே தமியள் ஒருத்தி தோன்ற"
மணிமேகலை: காதை 14: வரி 27-32

மயங்கிய மன்னன் கிள்ளிவளவன் அவளைப் பணிந்து, அவள் ஏவலைக்கேட்டு, அவளோடு கூடியிருந்தான். ஒருதிங்களளவும் அவள் அவனுடனே கூடியிருந்து கழித்த போதிலும், தான் யாரென்று சொல்லாது; ஒப்பற்ற பூங்கொடி போன்ற அவள்; இறுதியில் அவனை விட்டுப் பிரிந்து மறைந்தாள்.

## பீலிவளையின் புதல்வன்


நாகநாடு திரும்பிய பீலிவளை ஒரு ஆண் மகவைப் பெற்றெடுக்கிறாள். அந்த இளங்கிள்ளி வளர்ந்து பிள்ளைப் பிராயத்தை அடைந்த சமயத்தில் ஒரு நாள்; பகைவர்கள் நாகநாட்டின் மீது படையெடுத்து வருகிறார்கள். அரச குலத்தவரைக் கண்டால் கொலை செய்யத் தயங்க மாட்டார்கள்.

பீதி கொண்ட பீலிவளை இளங்கிள்ளியைச் சோழ நாட்டுக்கு, அவனது தந்தையான கிள்ளி வளவனிடம் அனுப்பிவிட எண்ணித் துறைமுகத்துக்கு விரைகிறாள். மரக்கலத்தின் சொந்தக்காரனான கம்பள வியாபாரி அப்பிள்ளையைப் பெற்றுக் கொண்டு போய் மன்னனிடம் கொடுக்க ஒப்புக் கொள்கிறான். அப்பிள்ளையின் கரத்திலே முத்திரை வளையலும், கழுத்திலே தொண்டைமாலையும் அடையாளமாக அணிவித்து அவனைக் கையளிக்கிறாள் பீலிவளை.

"கம்பளச் செட்டி கலம் வந்து இறுப்ப
அங்கவன் பாற் சென்று, அவன் திறம் அறிந்து
'கொற்றவன் மகனிவன் கொள்க'
எனக்கொடுத்தலும்,
பெற்ற உவகையன் பெருமகிழ்வு எய்திப்,
பழுதில் காட்சிப் பைங்கொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கித் துறை பிறக்கு ஒழிய."
மணிமேகலை: காதை 25: வரி184-189

## உடைந்த கலம்

அம் மரக்கலம் புறப்பட்ட அன்றிரவு கடலில் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கிக்கொண்டது.




"கலங்கொண்டு பெயர்ந்த அன்றே, காரிருள்
இலங்கு நீர் அடை கரை அக்கலங்கெட்டது
கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடிவெற் கிள்ளி மன்னனுக்கு உரைப்ப"
மணிமேகலை: காதை 25: வரி 190-193

சூறாவளியில் சிக்கிய அம்மரக்கலம் உடைந்தது. உடைந்துபோன கலத்தில் இருந்து உயிர்தப்பியவர்கள், கிள்ளிவளவனிடம் சென்று அப்புதல்வனை இழந்த வரலாற்றைச் சொன்னார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### மன்னனின் துயரம்

தனது மகன் கடலிலே இறந்து விட்டான் என எண்ணிய மன்னன் ஆற்றொணாத் துயரத்தில் இருந்தான். அச்சமயம் அரண்மனைக்கு வந்த ஒரு சோதிடன் மன்னனிடம் சென்று

"ஆங்கப் புதல்வன் வரு உம் அல்லது,
பூங்கொடி வாராள்; புலம்பல் இது கேள்"
மணிமேகலை: காதை 14: வரி 60-61

புலம்பவேண்டாம் மன்னா, பீலிவளையின் புதல்வன் உன்னிடம் வந்து சேருவான்; பூங்கொடியாகிய அவள் தான் உன்னிடம் இனிமேல் வரமாட்டாள் எனச் சொன்னான்.

### கடலில் கண்ட படகு

"பெரும்பாணாற்றுப்படை" கடியலூர் உருத்திரங்கண்ணார் எழுதிய இலக்கியம். இதற்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். அவர்கள் கூறுகின்ற கதையைப் பார்ப்போம்:

கடலில், காவிரிப்பூம்பட்டினக் கரையருகே மீன்பிடிக்கச் சென்ற திரையர்கள், கடலில் ஒரு படகு மிதந்து வருவதையும், அப்படகில் தொண்டை மாலையணிந்த ஒரு குழந்தையையும் கண்டார்கள். அக்குழந்தையை மன்னன் கிள்ளியிடம் கொண்டு போய்ச் சேர்ப்பித்தார்கள். கிள்ளிவளவன் அப்பிள்ளை தனது புதல்வனே என அறிந்து அவனுக்கே அடுத்த அரசுரிமை எனச் சொன்னான்.

".... அவன் வந்த கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாட்டாட்சி கொடுப்பேன் என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின், திரையனென்று பெயர் பெற்றான்" என நச்சினார்க்கினியர் உரை சொல்கிறார்.

"இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முன்னீர் வண்ணன் பிறங்கடை யந் நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர் தலையுலகத்து மன்னுயிர் காக்கும்"
பெரும்பாணாற்றுப்படை 11: 29-32.

### தொண்டைமான் தொடுவாய்

கழுத்தில் தொண்டை மாலையுடன் திரை தந்த மைந்தன், தொண்டைமான் இளந்திரையன் எனப் பெயர்பெறுகிறான். தொண்டைமான் வளர்ந்து வாலிபப்பிராயம் அடைகிறான். அவனுக்குத் தன் பிறந்த பூமியின் நினைவுகளும், அன்னையின் முகமும் பசுமையாக நெஞ்சில் பதிந்துவிட்டிருந்தது.

தான் பிறந்த பூமியான மணிபல்லவத்தைப் பகைவர்கள் கைப்பற்றி, அங்கே ஆட்சி செய்த நாக மன்னர்களைக் கொன்று, மக்களை வருத்திக் கொடுங்கோலாட்சி நடத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்கிறான். தான் பிறந்த மண்ணுக்குச் செய்ய வேண்டிய கடமை அவனை மணி பல்லவத்துக்கு அழைக்கிறது.

ஒருநாள், பூம்புகாரிலிருந்தும் நாகையிலிருந்தும் போர் வீரர்களைத் தாங்கிய மரக்கலங்கள் மணி பல்லவத்தை நோக்கி வருகின்றன. அவற்றிற்குத் தலைமை தாங்கி வந்து கொண்டிருக்கிறான் தொண்டைமான்.

வரிசை வரிசையாக வேல்கள் ஏந்திவரும் கப்பல்களைக் கண்ட மணிபல்லவ மக்கள், பாற் கடலில் பள்ளி கொண்ட திருமால், ஆழித்தேவனாக அவதாரமெடுத்து வருகிறாரோ என வியப்புடன் பார்க்கிறார்கள்.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப் பாணத்தில், கட்டுவனூரில் வாழ்ந்தவர் விசுவநாதக் கவிராயர். வல்லிபுரத்தில் கோவில் கொண்ட திருமாலைப் போற்றி வல்லைப்பதிகம் என்றொரு பாடலைப் பாடியிருக்கிறார்.(16)

"திரைகடல் மடிமிசை பலவே லேந்தி,
தொடுவாய் தோண்டி நாவா யோட்டி,
பகைவனை யொழித்துப் பல்லவ மீட்டி,
புஞ்சம் நல்கிப் பஞ்சம் போக்கி,
வல்லையம் பதியினி லாலயம் தோற்றி,
விண்ணவன் கார்முகில் வண்ணனை யேற்றி,
ஆயிரம் தலைவிரிப் பள்ளியான் தொழீஇ,
ஆழித் தேவன் தொண்டைமான் வாழி!"
வல்லைப் பதிகம்.

திரைகடல் மீது பல கலங்களில் வேல்களைத் தாங்கி வந்த தொண்டைமான், கடலிலிருந்து நிலப்பகுதிக்குள் கடல் தொடுவாய் தோண்டி, அதனூடே தனது கலங்களைச் செலுத்துகிறான். பகைவனுடன் போரிட்டு அவனை அழித்து. மணி பல்லவத்தை எதிரிகளிடமிருந்து மீட்டு, பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உணவு கொடுத்து இன்னல் தீர்க்கிறான்.

பின்னர் வல்லையம்பதி என்ற வல்லி புரத்தில் விண்ணவனான (விண்ணு - விஷ்ணு) கார்முகில் வண்ணனுக்கு ஆலயம் கட்டுவிக்கிறான். ஆயிரம் தலை கொண்ட ஆதிசேஷன் மீது துயில் கொள்ளும் மாதவனைத் தொழுது வணங்கிய, ஆழித் தேவனான தொண்டைமானே நீ வாழ்க என வாழ்த்துகிறார் புலவர்.

தொண்டைமான் வெட்டுவித்த கடல் கால் வாய் "தொண்டைமான் ஆறு" என அழைக்கப்பட்டது.

விசுவநாதப் புலவரைத் தொடர்ந்து உரைப்பவர் விநாசித்தம்பிப் புலவர். இவர் எழுதிய ஆற்றுப்பாடல் வரிகள் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கந்தன் திருத்தல புராணத்தில் இடம் பெறுகிறது.(17)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலில் வல்லியாறு என வழங்கப்பட்ட ஆற்றின் பெயர் பின்னர் தொண்டைமான் ஆறு என அழைக்கப்பட்டதைப் பின்வரும் பாடல்கள் எடுத்து உரைக்கின்றன. முதல் பாடலில் யாழூர். மணிக்கரை (மணிபல்லவம்) என்ற பெயராலும் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.


"பொன்னுயர் ஈழ நாட்டில்
பொருந்திய வடபால் யாழூர்
மன்னிய விந்து வாரி மணிக்கரை வந்து சேர
உன்னிய செழுமையாற்றி ஒளி மயிலழகனாரின்
சொன்னல முழங்க ஓடும்
தொழ வல்லியாறு சூழ்ந்தே"

ஆற்றுப்பாடல்: 1

இந்த ஆறு பாயும் வல்லிபுரப் பிரதேசத்தை தொண்டைமான் என்ற அரசன் ஆண்டதாகவும் அந்த அரசனின் பெயரைச் சொல்லியே, இந்த ஆறு தொண்டைமானாறு என வழங்கப்பட்டதையும் இப் பாடல் எடுத்துச் சொல்கிறது:

"தாவலை வல்லியாற்றின்
சார் நிலம் தன்னை யாண்ட
கோவெனும் தொண்டைமானைக்
குரை கடல் நாட்டை கொள்ளத்
தீவினை புரிந்த வாற்றால்
தெளி நன்னீர் யாறு
பின்னர்த் தூவல்லி நாம மாறித்
தொண்டைமானாறாயிற்றே."

ஆற்றுப்பாடல்:2




சில காலம் மணிபல்லவத்தை ஆண்ட பின்னர் சோழநாடு திரும்பி, காஞ்சியில் புதியதொரு தலைநகர் அமைத்து, புதியதொரு அரசை ஸ்தாபிக்கின்றான் தொண்டைமான்.(18) அவன் ஆட்சி செய்த சோழ நாட்டின் வடபகுதி தொண்டை மண்டலம் எனப் பெயர் பெறுகிறது.(19) அவனது வம்சாவளியினர் பல்லவர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

இக்கதையிலே மணிமேகலை, பெரும்பாணாற்றுப் படை, வல்லைப் பதிகம், செல்வச் சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம் ஆகிய இலக்கியங்களில் கண்ட சம்பவங்கள் இணைக்கப்பட்டு இருக்கின்றது. இதில் மணிமேகலையில் கண்ட கதையையும். பெரும்பாணாற்றுப் படையில் கண்ட சம்பவங்களையும் இணைத்த பெருமை முதலியார் இராசநாயகத்திற்கு உரியது.(20)

**முற்றும்**

**இவ்வரலாற்றுத் தொடரை முழுமையாக படிக்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**

## அடிக்குறிப்பு:

10. சீனி.வேங்கடசாமி. பௌத்தமும் தமிழும், சென்னை 1978
11. Codrington,H.W. Ceylon Coins and Currency, Colombo, 1924
12. Loventhal, Rev. E. The Coins of Tinnevelly, Madras, 1938
13. மேற்படி நூல்
14. Alain Danielou. Introduction to Maniekhalai The Dancer with the Magic Bowl, New York, 1989
15. நடன காசிநாதன்: பூம்புகாரும் அகழ்வாய்வும், சென்னை, 1999.
16. பண்டிதர் முத்துக்குமாரு, வ.கட்டுவனூர்க் கவி. பாவலர் ஞானோதய சங்க வெள்ளிவிழா மலர், சுன்னாகம், 1953
17. விநாசித்தம்பிப் புலவர். யாழ்.தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம். வீ.ஸ்ரீதரன் பதிப்பு, திரு நந்தி, மல்லாகம், 1978.
18. பெரும்பாணாற்றுப்படை கடியலூர் உருத்திரங் கண்ணார், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு.
19. மேற்படி நூல்
20. Rasanayagam. Ancient Jaffna, pp26-31.
21. யாழ்ப்பாண வைபவமாலை, குல சபாநாதன் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1949, ப.14
22. Nilakanta Sastri, K.A. A History of South India.
23. Paranavithana,S. Vallipuram Gold Plate, Epigraphica Zeylanica, Vol.vi, p.237.□□□□□□□□□□□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

**ஒரு உண்மைக்கதை. இது போல எத்தனையோ அப்பாவிகளின் கண்ணீர்க் கதைகள் இலங்கைச் சிறைச்சாலைகளின் உள்ளேயும், புகலிடச் சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்களினுள்ளேயும் தேங்கிக்கிடக்கின்றன. இவர்களின் விடிவிற்கான செயற்பாடுகளில் இறங்கிக் குரல்கொடுக்க நாம் முன்வர வேண்டாமா?**

ஓவியம் - புகழேந்தியின் எரியும் வண்ணங்களில் இருந்து.

**இரா.சிவரஞ்சனின்**

# சிறைகளின் குரல்

எப்பொழுது பொழுது விடியும் என்ற எதிர்பார்ப்புடன் அழுது கொண்டிருந்தாள் இலக்கியா. இலங்கையிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் சிறைக்கைதியாக இரண்டு வருடங்களாக பல துன்பங்களுக்கு மத்தியிலும் ஒரு நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்.

அன்று ஒரு நாள் இரவு நேரமாகியதும் பெண் சிறைக்காவலதிகாரியாக அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டவர் வந்து சகல கைதிகளையும் பார்வையிட்டார். அந்நேரத்தில் அழுது கொண்டிருந்த இலக்கியாவையும் அவர் பார்வையிட்டார். அவரைக் கண்டதும் இலக்கியா மேலும் அழத் தொடங்கினாள். காரணம் புதிய சிறை அதிகாரியின் கண்களில் பளிச்சிட்ட இரக்கப் பார்வையாக இருக்கலாம். துன்பங்கள் சேர்கையில் யார் அணைப்பார்களோ அவர்கள் தானே துன்பப்படுபவனுக்குக் கடவுள்? புதிய காவலதிகாரி இலக்கியாவின் கதையைச் செவிமடுக்கத் தயாரானார். அதற்கான நேரம் ஒதுக்கி அழைக்கப்பட்டாள்.



" நீங்கள் எப்படி இங்கே..?" அதிகாரியின் ஆதரவான கேள்வி இலக்கியாவை அவரிடம் நெருங்கவைத்தது. "நான் ஜேர்மனிக்குப் போனபோது அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டேன். எனக்கும் இயக்கங்களுக்கும் தொடர்பிருப்பதாகச் சந்தேகித்ததனால் இரண்டு வருடங்களாக இங்கே இருக்கிறேன். இலக்கியா மீண்டும் அழத்தொடங்கினாள். பின் தன்னைச் சாசுவதப்படுத்திக்கொண்டு தொடர்ந்தாள்.

" நான் எந்த ஒரு பாவமும் அறியாதவள். எனக்கும் அரசியலுக்கும் ஆயுதப்போராட்டத்துக்கும் எந்தத் தொடர்புமேயில்லை. பெற்றவர்களைப்பார்க்கக் கூட எந்த வழியுமில்லை. எனது பெற்றோர்கள் சகோதரங்களைப் பார்க்க வேண்டும் போல் தோன்றினாலும் மனதை அடக்கிக்கொண்டு வாழ்ந்து வருகின்றேன் .கடவுள் எனக்கு மட்டும் ஏன் துன்பங்களையே அனுபவிக்க விதித்தானோ தெரியவில்லை. இப்போது சிறைச்சாலை பழக்கமாகி விட்டது. இங்கு நான் அனுபவிக்காத துன்பமா இனிமேல் அனுபவிக்கப்போகின்றேன்? காலையில் எழுந்த நேரம் முதல் கடினமான வேலையும் அதற்குச் சம்பளமாக சித்திரவதையும் தான். எல்லாம் எனது சிறுவயதிலேயே அனுபவித்து விட்டேன். எமது தேசத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்திருந்தால் ஏன் இந்தப்பிரச்சினை எழ வேண்டும்? பிரச்சினையே வாழ்க்கையாக ஏன் அமைய வேண்டும்.

"நான் பிறந்ததும் அதிர்ஷ்டமானவள் என்று கொஞ்சிக்குலவி எனக்கு இலக்கியா என்று பெயரிட்டனர். பாடசாலை வாழ்வில் கெட்டிக்காரியாகப் பெயர் பெற்றேன். தேசம் பிளவு பட்டது. பிறநாட்டில் புகலிடம் தேட நிர்ப்பந்திக்கப்பட்டேன். என் மாமா ஒருவரின் உதவியுடன் ஜேர்மனியை நாடிப் பயணித்தேன். பல சிரமங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தேன். நான் மட்டுமா, தம் தள்ளாத வயதில் என் பெற்றோருமல்லவா எனக்காக இந்தக்கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

" கொழும்பில் ஏஜென்சி பிடித்து பலநாள் காத்திருப்புக்குப் பின் ஒருவாறு விமானமேறினேன். போக்கிடம் தெரியாது விமானமேறி, விபரமறியாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு நாட்டில் இறக்கப்பட்டேன். அது ரஷ்யா என்று பின்னர் அறிந்து கொண்டேன். மொழியறியாத அந்தப்பனி மழைப்பிரதேசத்தில் பதினெட்டு மாதம் அனாமதேயமாகக் காத்திருந்தேன். கொழும்பில் விமானமேறியதும் சிலமணி நேரத்தில் ஜேர்மனி என்றவர்கள் ஐநூறு நாட்கள் கடந்தும் அந்த ஜேர்மனியின் நிறமே தெரியாதிருந்தேன்.

"ஒரு நாள் மாலை, திடுதிப்பென்று இருவர் வந்தார்கள். என்னையும் உடனிருந்த அறுவரையும் அழைத்துச் சென்றார்கள். கேட்டதும் எங்கே ஏன் என்றெல்லாம் கேட்கும் பழக்கத்தை மறந்திருந்தோம். அதற்கான மனவலிமையும் அன்று எம்மிடம் இருக்கவில்லை. நாம் பெண்கள் என்ற உணர்வுகூட மழுங்கடிக்கப்பட்டிருந்தது.

" நீண்டதூரப்பயணம். ஜேர்மனி வந்ததும் எழுப்பிவிடுகின்றோம். அதுவரை தூங்குங்கள் என்றான் ஒருவன். நாங்கள் தூங்கிக் கொண்டே விழித்திருந்தோம். திடீரென வாகனம் நின்றது. " இதோ ஒரு நாட்டு எல்லை வருகின்றது. அனைவரும் இறங்கி இந்த நடைபாதையால் நடந்து செல்லுங்கள். நாம் எல்லை கடந்ததும் உங்களைச்சந்திப்போம்." என்றான் ஒருவன். நாங்களும் இறங்கி அந்தப்பனியில் புதிய உலகைக்காணும் ஆர்வத்தில் புதர்களினூடாக நடந்தோம். ஒரு எல்லைதாண்டி அவன் குறிப்பிட்ட இலக்குத் தெரிந்தது. பற்றை மறைவில் காத்திருந்தோம். வாகனம் வந்தது. ஏறி மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். இப்படியே இறக்கங்களும் ஏற்றங்களுமாக நீண்ட பயணம் தொடர்ந்தது. "சிலமணி நேரத்தில் ஜேர்மனியை அடைந்து விடுவோம்" ஆறுதல் சொன்னான் ஒருவன். நம்பிக்கை கொண்டு புதிதாக உடலிலும் உள்ளத்திலும் வலுவைச் சேர்த்துக்கொண்டோம்.

அதிகாலை வேளையில் அழைத்துச் சென்றவர்களில் ஒருவன் தன் கைத்தொலைபேசியை என்னிடம் தந்து கதைக்கச் சொன்னான. மறுமுனையில் என்னை என்றோ நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் மாமா. குரலைக் கேட்டதும் என் சோகம் பறந்தது. அந்த உணர்ச்சியை சொல்லில் வடிக்க முடியவில்லை. சிலமணி நேரங்களில் ஜேர்மனியிலிருந்த என் மாமாவின் வீட்டில் என்னை ஒப்படைத்து விட்டு அவர்கள் மற்றவர்களுடன் போய்விட்டார்கள்.

"அங்கே போய்ச்சேர்ந்ததும் எப்படி உம்மைப்பிடித்துத் திருப்பியனுப்பினார்கள்?" அதிகாரி வினாவினார்.

" ஜேர்மன் வருகைக்காக ரஷ்யாவில் காத்திருந்த அந்தப் பதினெட்டு மாதங்கள் கூட என்னால் ஜேர்மனியில் தங்க வாய்ப்புக்கிட்டவில்லை. ஜேர்மனியில் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்தோம். இரு மாதங்களில் அது நிராகரிக்கப்பட்டது. மீண்டும் மேன்முறையீடு செய்தோம். பலனில்லை. நாட்டுப் போர் நிலைமையை விளக்கினோம். கேட்பாரில்லை. உடனடியாக நாடு திரும்பும் படி உத்தரவிட்டார்கள். அவர்களது உத்தரவுக் கடிதத்துடன் அவர்களிடம் மேல் முறையீடு செய்து பார்க்கும் இறுதி நம்பிக்கையுடன் அதிகாரியிடம் சென்றோம். அவர்கள் உடனடியாகவே என்னை என் மாமாவிடமிருந்து பிரித்துத் தற்காலிக முகாமில் தள்ளி விட்டார்கள். கடுகதி வேகத்தில் பிரயாணப்படிவங்களைத் தயாரித்து எம்மை இலங்கைக்கு விமானத்தில் ஏற்றிவிட்டார்கள். அதே விமானத்தில் ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு விடுமுறைக்குச் சென்ற ஜேர்மனிய இலங்கையரும் வெளிநாட்டில் விடுமுறை கழித்துத் திரும்பும் இலங்கையரும் இருப்பதைக் கண்டு கூனிக்குறுகினேன்.

"ஆறுமாதங்கள் கூட அங்கு இருக்கவில்லை. உன் தாய்நாட்டிலேயே அகதியாக இரு என்பது போல் என்னை அனுப்பி விட்டார்கள். கட்டுநாயக்கா விமானநிலையத்திலேயே என்னைக் கைது செய்து இங்கே கொண்டு வந்து விட்டார்கள். இங்கிருந்து என் பக்கத்து நியாயங்களைக் கேட்க எவரும் இல்லை. எனது முயற்சிகள் எதுவும் கருத்துக்கெடுக்கப்படவில்லை. நீங்களாவது எனக்கு உதவி செய்வீர்களா?" கேள்விக்குறியுடன் அதுவரை அழுத்திவந்த தன் மனப்பாரத்தை இறக்கி வைத்தாள் இலக்கியா.□□□□□□□□□□□


தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப் பெற்ற 1000 நூல்களின் தொகுப்பு.
நூலக விஞ்ஞான அடிப்படையில் வெளிவந்துள்ள ஒரே ஆவணம்.

# நூல் தேட்டம் I

உங்கள் பிரதிகளுக்கு ~ தேசம்
த ஜெயபாலன் 0044208 279 0354
என் செல்வராஜா 0044158 270 3786




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பேராசிரியர் இ.பாலசுந்தரத்தின்

ஈழத்து

# இடப்பெயர் ஆய்வு

யாழ்ப்பாண மாவட்டம்



என் செல்வராஜா
நூலகவியலாளர் &
நூலியலாளர்

இடப்பெயர் ஆய்வு என்பது பல்வேறு துறைகளையும் ஒன்றிணைப்பதாகும். மொழியியல், மானிடவியல், வரலாற்றியல், அகழ்வாராய்வியல் சமூகவியல் போன்ற பன்முகப்பார்வை கொண்டு நோக்கப்பட வேண்டியது இத்துறை. இவ்வாய்வினை மேற்கொள்ளும் எவரும் அகநிலைப் போக்கிலும் அறிவியல் போக்கிலும் மிக அவதானமாக இருக்க வேண்டும். இன மத உணர்வுகளுக்கு ஆட்படுவோர் அகநிலைப் போக்கில் தன் ஆய்வைத் தொலைத்து விடும் அபாய நிலையை இன்று காண்கின்றோம்.

நடுநிலையில் நின்று ஈழத்து இடப்பெயர் ஆய்வுகளை மேற்கொள்ளும் முயற்சி மிகவும் அரிதான நிலையில் இன்று வரை காணப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் அறிவியல் போக்கில் வழிநடந்து நடுநிலையில் நின்று தன் ஆய்வை வழி நடத்திச் சென்றுள்ள ஒரு ஆய்வாளரின் பிரசவமாக 'இடப்பெயர் ஆய்வு யாழ்ப்பாண மாவட்டம்' என்ற நூல் கனடாவிலிருந்து 434 பக்கங்களுடன் வெளி வந்துள்ளது.

சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழக இடப்பெயர்களை மாவட்டரீதியில் ஆய்வுக்குட்படுத்தி தனித்தனி நூல்களாக்கியுள்ளது. கலாநிதி இ.பாலசுந்தரம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பின் பேரில் 1980 களில் ஆரம்பித்து ஈழத்தில் தமிழர் வாழும் மாவட்டங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து ஆழமாகவும் முழுமையா கவும் உண்மைகளைக் கண்டறிய எடுத்த முதல் முயற்சியே இந்நூல் ஆகும்.

இதுவரை காலமும் வெளிவந்த யாழ்ப் பாணத்து ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆக்கங்கள், அறிஞர்களின் கருத்துக்கள் என்பனவற்றை அடிப் படையாகக் கொண்டு உண்மைகளை அறிய இந்நூலில் ஆசிரியர் முற்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான ஊர்களுக்குச் சென்று பல்வேறுபட்ட நிலைகளில் தகவல்களைச் சேகரித்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்தினது பெயர் விளக்கங்கள், அவ்விடப் பெயர்களின் பின்னணியிலுள்ள வரலாறு, சமயம், மொழிவழக்கு, பண்பாடு, தொழில்முறைகள் முதலான பல்வேறு விடயங்கள் இந்நூலிலே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரிலுமுள்ள குறிச்சிப் பெயர்கள், கோயிற் பெயர்கள். காணிப் பெயர்களும் இவ்வாராய்ச்சியில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றினூடாகப் பெறப்ப டும் வரலாற்றுண்மைகளும் நூலிலே தரப்பட்டுள்ளன.





நூலாசிரியர் - ஆய்வாளர்
கலாநிதி பாலசுந்தரம்

பேராசிரியர் பாலசுந்தரம் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கடமையாற்றிய வேளையில் அவரது நாட்டாரியல் ஆர்வம் மேலோங்கியிருந்தது. சத்தியவான் சாவித்திரி, காத்தவராயன் போன்ற நாடகங்களை பல தடவைகள் பல்கலைக்கழக மாணவர்களின் உதவி உடன் மேடையேற்றியவர்.

காங்கேசன் கல்வி வட்டாரத்தின் இடப் பெயர் ஆய்வு 1988இல் இளவாலை பண்டிதர் அப்புத்துரை மணி விழாக்குழுவினராலும், வடமராட்சி தென்மராட்சிக்கான இடப்பெயர் ஆய்வு 1989இல் புலோலி வல்லிபுரம் இந்து கல்வி கலாச்சார மன்றத்தினராலும் வெளியிடப்பட்டிருந்தது. இன்று முழுமை வடிவில் அழகுற வெளியிடப்பட்டுள்ள இடப்பெயர் ஆய்வு நூல் முன்னைய இரு நூல்களின் உள்ளடக்கத்தையும் கொண்டு யாழ்ப்பாண மாவட் டத்திற்கானதொரு பரந்த ஆய்வாக வந்துள்ளது.□□

இந்நூலின் பிரதிகளை பெற விரும்புவோர் தங்கள் முகவரியுடன் 12.50 பவுணுக்கான (தபால்செலவு உட்பட) காசோலையை தேசம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
THESAM, P O Box 35806, E11 3JX
United Kingdom



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலண்டன் நூல்களுக்கு இலங்கையில் வரவேற்பு

தேசம் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் என் செல்வராஜாவின்; யாழ்ப்பாண நூலகம் ஓர் ஆவணம், நூல் தேட்டம் ஆகிய வாராற்று ஆவணங்களின் வெளியீடு ஒக்ரோபர் 26ம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் சோ சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவர் செல்லச்சாமி இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் தமிழகம், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.



தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவர் செல்லச்சாமி நூலகர் செல்வராஜாவுக்கு பொன்னாடை போற்றுகிறார்.

## அங்கு சிதறிய சில கருத்துக்கள் :

யாழ் நூலகக் கட்டிடம் புனர்நிர்மானம் பெறலாம். எனினும் அரிய பொக்கிஸங்களான அதன் நூல்கள் மீளப்பெற முடியுமாயிருக்குமா? - பரமேஸ்வரன் - இந்து சமய கலாச்சார அமைச்சின் செயலாளர்.

மானுடம் தன் அனுபவத்தை மொழியில் பதிவு செய்வதால் அது வரலாறு படைக்கிறது. தமிழர்கள் வரலாற்றைப் பாதுகாக்கத் தவறிவிட்டார்கள். அதனால் தான் காவியங்கள் நிலைத்து நிற்கின்ற போதிலும் அதன் ஆக்க கர்த்தாக்களின் வரலாறுகள் இல்லாமற் போயுள்ளன. - கம்பவாருதி ஜெயராஜ்

யாழ் நூலகம் எரிந்த பின்னரே தமிழர்களின் உணர்வுகளில் உத்வேகம் ஏற்பட்டது. இரு கட்சிகளால் ஏற்பட்ட அழிவுகளுக்கு அந்த இரு கட்சிகளும் இணைந்தே தீர்வு காண வேண்டும். - செல்லச்சாமி - தொழிலாளர் காங்கிரஸ் பிரதித் தலைவர்.



கலாச்சார அழிவுகள் தடுக்கப்படக் கூடியவை. இது சட்ட முறைகளில் வலுவாக உள்ளது. இனத்தின் இருப்பினை அழிப்பதுவும் இனப்படுகொலையே. - வி ரி தமிழ்மாறன்.

இந்நூல் ஒரு கலாச்சாரப் பதிவேடு. இது பாரம்பரியத்தின் பின்னனியைப் பிரதி பலிக்கும். - சிவநேசச் செல்வன் - பத்திரிகையாளர்.

இலக்கிய ஒன்று கூடலில் கலந்து கொண்ட சபையினரில் ஒரு பகுதியினர்.

www.tamilarangam.net

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார விடயங்களைத் தாங்கி வரும்

# தேசம்



1. TRAG, 19 ஒக்ரோபரில் அரசியல் தஞ்ச விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. அதில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் வதிவிட உரிமை பெற்றவர்களே. இதில் பேசிய சட்ட வல்லுநர் நகுலேஸ்வரன் 1992ம் 2000ம் ஆண்டுகள் அகதிகளின் பொற்காலம் என்று குறிப்பிட்டார். மேலும் வழக்கிற்கு இரண்டு நாட்களுக்கு முன் வந்து நின்று வழக்கை நடத்தித் தரச் சொல்லும் பழக்கத்தை தமிழர்கள் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



2. நவம்பர் 27ல் நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் அவரது சமூக சேவைக்காக கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தால் கௌரவப் பட்டம் வழங்கிப் பாராட்டப்பட்டார். இது தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட கௌரவம் எனக் கூறிய அவர் இவ்விருதைத் தான் UNHCRக்கும் தமிழ் மக்களுக்கும் சமர்ப்பிப்பதாகக் குறிப்பிட்டார். சமூக சேவைக்காக ஒரு தமிழர் பல்கலைக் கழகத்தால் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



3. ஈழத்து திரைக் கலைஞர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட சிலோன் சின்னையாவும்(இடம்), இயக்குநர் ரகுநாதனும்(வலம்). சிலோன் சின்னையா சில தென்னிந்திய தமிழ் படங்களிலும் நடித்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்